# தினபூமி

thinaboomi.com

மதுரை, வெள்ளி, மார்ச் 14, 2025 | சென்னை | மதுரை | திருச்சி | கோவை | நெல்லை | சேலம் | வேலூர் | புதுச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00




**கனடா நாட்டின் 24-வது பிரதமராக மார்க் கார்னி இன்று பதவியேற்கிறார்**

...2-ம் பக்கம்

**செயற்கைக்கோள்களை வெற்றிகரமாக விடுவித்து இஸ்ரோ புதிய சாதனை**

...3-ம் பக்கம்

**சி.எஸ்.கே அணியை இன்ஸ்டாவில் பின்தொடர்பவர்கள் எண்ணிக்கை 17 மில்லியனை தாண்டி சாதனை**

...6-ம் பக்கம்







முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக்குழுவின் சார்பில் தயாரிக்கப்பட்ட 'தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை 2024-25'-யை வெளியிட்டார். உடன் துணை முதல்வரும், மாநில திட்டக்குழுவின் அலுவர் சார் துணைத்தலைவரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, செயல் துணைத் தலைவர் ஜெயரஞ்சன், தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் துறை சார்ந்த அரசு உயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 2025-26-ம் நிதி ஆண்டுக்கான

# தமிழ்நாடு பட்ஜெட் இன்று சட்டப்பேரவையில் தாக்கல்

## புதிய அறிவிப்புகள் வெளியாகுமா என எதிர்பார்ப்பு

சென்னை, மார்ச் 14-

**தமிழக சட்டபேரவை இன்று கூடுகிறது. இந்த கூட்டத்தில் 2025-ம் ஆண்டுக்கான தமிழக பட்ஜெட்டை நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்கிறார்.**

**கூட்டத்தொடர்...**

தமிழக சட்டப்பேவையின் இந்த ஆண்டுக்கான முதல் கூட்டம் கடந்த ஜனவரி 6-ம் தேதி கவர்னர் ஆர்.என்.ரவி உரையுடன் தொடங்கி முடிவடைந்தது. இந்நிலையில், சட்டப்பேரவையின் அடுத்த கூட்டத்தொடர் மார்ச் 14-ம் தேதி (இன்று) தொடங்குகிறது. இன்று காலை 9.30 மணிக்கு சட்டப்பேரவையில் 2025-2026-ம் ஆண்டுக்கான பட்ஜெட்டை நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்யவுள்ளார்.

**வருவாய் வரவுகள்...**

கடந்த ஆண்டுகளில் தமிழக அரசுக்கு வந்த வருவாய் வரவுகள், செலவுகள், வாங்கிய கடன், கடனுக்கான வட்டி எவ்வளவு போன்ற தகவல்களை அவர் வெளியிட இருக்கிறார். அதேபோல், 2025-26-ம் ஆண்டில் தமிழக அரசு உத்தேசமாக மேற்கொள்ள உள்ள செலவுகள், உத்தேசமான வருவாய் வரவுகள் போன்ற தகவல்களையும் அவர் அளிக்கவுள்ளார்.

**புதிய திட்டங்கள்...**

அடுத்த 2026-ம் ஆண்டில் சட்டசபை தேர்தல் வருகிறது. தேர்தலுக்கு முன்பு இடைக்கால பட்ஜெட்டைதான் இந்த அரசு தாக்கல் செய்ய முடியும். எனவே தற்போது தமிழக அரசு தாக்கல் செய்யும் பட்ஜெட்தான் முழுமையாக இருக்கும். அதனால் இந்த பட்ஜெட் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

இந்த பட்ஜெட்டில் மக்களை கவரும் வகையில் பல்வேறு பல்வேறு புதிய திட்டங்கள் இடம் பெற வாய்ப்புள்ளது. பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்களை இந்த அரசு தீட்டி வருகிறது. அந்த வகையில், ஏற்கனவே உள்ள திட்டங்களில் அளிக்கப்படும் உதவித்தொகை இந்த பட்ஜெட் மூலம் அதிகரிக்கப்படுமா? உரிமைத்தொகை பெறுவோரின் எண்ணிக்கை உயர்த்தப்படுமா? இலவசமாக பெண்கள் பயணிக்கும் பஸ்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமா? போன்ற கேள்விகளை பெண்கள் மத்தியில் பட்ஜெட் எழுப்பியுள்ளது.

**அலுவல் ஆய்வு கூட்டம்**

இந்த பட்ஜெட் உரையை சட்டசபையில் 2 மணி நேரம் நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு படிப்பார். அவர் படிக்க படிக்க அந்த தகவல்கள் நேரலையில் வெளியிடப்படும்.

அவையில் வைக்கப்பட்டுள்ள கம்ப்யூட்டரில் பட்ஜெட்டை எம்.எல்.ஏ.க்கள் வாசிப்பார்கள். பட்ஜெட்டை அமைச்சர் வாசித்து முடித்ததும் அவையின் அன்றைய நிகழ்ச்சிகள் முடிவுக்கு வரும். அதன் பின்னர் அலுவல் ஆய்வுக்குழு கூட்டம், சபாநாயகர் அப்பாவு தலைமையில் அவரது அறையில் நடத்தப்படும். அவையை எத்தனை நாட்கள் நடத்த வேண்டும்? என்னென்ன அலுவல்களை எடுக்க வேண்டும்? என்பது உள்பட அந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை சபாநாயகர் வெளியிடுவார்.

**பட்ஜெட் மீது விவாதம்**

பொதுவாக பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டதும் மறுநாளில் வேளாண்மை பட்ஜெட்டை வேளாண்மைத் துறை அமைச்சர் தாக்கல் செய்வார். அந்த வகையில் வேளாண்மை பட்ஜெட் நாளை (15-ம் தேதி - சனிக்கிழமை) தாக்கல் செய்ய வாய்ப்பு உள்ளது.

வரும் 17-ந் தேதி சட்டசபையில் பட்ஜெட் மீதான எம்.எல்.ஏ.க்களின் விவாதம் தொடங்கும். அப்போது சட்டசபையில் இடம் பெற்றுள்ள கட்சிகள் சார்பில் எம்.எல்.ஏ.க்கள் கருத்துகளை எடுத்துரைப்பார்கள். 4 அல்லது 5 நாட்கள் இந்த விவாதம் நடைபெற்று,

எம்.எல்.ஏ.க்களின் கருத்துகளுக்கு நிதித்துறை அமைச்சர் பதில் அளித்து பேசுவார். அதன் பின்னர் சில நாட்கள் இடைவெளி விடப்பட்டோ அல்லது தொடர்ச்சியாகவோ சட்டசபை நடைபெறும். அப்போது ஒவ்வொரு அரசுத் துறைகளின் மீதான மானியக்

(கடைசி பக்கம் பார்க்க)

### மாநில திட்டக்குழு சார்பில் தயாரிக்கப்பட்ட

# தமிழக பொருளாதார ஆய்வறிக்கையை வெளியிட்டார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, மார்ச் 14-

**தமிழக சட்டப்பேரவையில் 2025-2026-ம் ஆண்டுக்கான பட்ஜெட் இன்று தாக்கல் செய்யப்படவுள்ள நிலையில், மாநில திட்டக் குழு சார்பில் தயாரிக்கப்பட்ட 'தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை 2024-25'-ஐ தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (மார்ச் 13) வெளியிட்டார்.**

தலைமைச் செயலகத்தில் நேற்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், மாநில திட்டக்குழு சார்பில் தயாரிக்கப்பட்ட 'தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை 2024-25'-ஐ வெளியிட்டார். அப்போது நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலர் உதயச் சந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

மத்திய அரசு ஒவ்வொரு முறை பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாக, இதுபோன்ற பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்வது வழக்கம். அந்த வகையில், தமிழக அரசு முதல்முறையாக இம்முறை 2025-2026-ம் ஆண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்படவதற்கு முன்பாக, பொருளாதார ஆய்வறிக்கையை தாக்கல் செய்துள்ளது.

முக்கிய அம்சங்கள் வருமாறு:-

1) 2021-22-ல் இருந்தே 8 சதவீதம் அல்லது அதற்கு மேலான வளர்ச்சி விகிதத்தைத் தமிழ்நாடு தொடர்ந்து எட்டி வருகிறது. 2025-25லும் 8 சதவீதம் அல்லது அதற்கு மேலான வளர்ச்சி விகிதத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2) தமிழ்நாடு 2023-24-ம் ஆண்டில் தேசிய உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 9.21 சதவீதம் பங்களித்துள்ளது. 2023-24ல் மாநில உள்நாட்டு உற்பத்தியானது (ஜிஎஸ்டிபி) ரூ.27.22 லட்சம் கோடியை எட்டியுள்ளது. பெயரளவு வளர்ச்சி விகிதம் 13.71 சதவீதமாகவும், உண்மையான வளர்ச்சி விகிதம் 8.33 சதவீதமாகவும் உள்ளது.

3) தமிழகத்தின் தனிநபர் வருமான வளர்ச்சியானது தொடர்ந்து பல ஆண்டுகளாக தேசிய சராசரியைவிட அதிகமாகவே இருந்து வருகிறது. 2022-23ல் ரூ.2.78 லட்சமாக இருந்தது; இது தேசிய சராசரியான ரூ.1.69 லட்சத்தைக் காட்டிலும் 1.64 மடங்கு அதிகமானதாகும். இதன் காரணமாக தனிநபர் வருமானத்தில் தமிழகம் நான்காம் இடம் வகிக்கிறது. மாநிலத்தின் தனி நபர் வருமானம் குறிப்பிடத்தக்க அளவில் தேசிய சராசரியை விட மேலே உள்ளது.

4) 2023-24ல், சேவைத் துறையானது மாநிலத்தின் மொத்த மாநில உற்பத்தி மதிப்புக்கூட்டலில் (ஜிஎஸ்விஏ) 53.63 சதவீதம் பங்களித்தது; அதற்கடுத்து இரண்டாம் நிலைத் துறை (33.37 சதவீதம் ), முதன்மைத்துறை (13 சதவீதம் ) பங்களித்துள்ளன. வளர்ந்த மாநிலங்களைப் போலவே மாநிலத்தின் இரண்டாம் நிலைத் துறையின் பங்கு 5 சதவீதம் அளவில் அதிகரித்தால், வேலை வாய்ப்புகள் மேலும் அதிகரிக்கும்.

5) தமிழ்நாட்டில் 2022-23-ல் 6 சதவீதம் என்றிருந்த சில்லறை வர்த்தகப் பணவீக்கம், 2023-24ல் 5.4 சதவீதமாகவும், 2024-25ல் (ஜனவரி 2025 வரையில்) 4.8 சதவீதமாகவும் குறைந்துள்ளது. தமிழ்நாட்டில் 2019-20ல் 6 சதவீதம் என்றிருந்த நகர்ப்புர பணவீக்கம் 2024-25-ல் (ஜனவரி 2025 வரையில்) 4.5 சதவீதமாக குறைந்துள்ளது.

6) மொத்த பயிரிடப்பட்ட பரப்பளவில் நெல், மக்காச் சோளம், கம்பு, கேழ்வரகு, தினை வகைகள் உள்ளிட்ட உணவு தானியங்கள் 62 சதவீதமாகவும், எண்ணெய் வித்துகள், கரும்பு, பருத்தி போன்ற உணவு தானியமல்லாத பயிர்கள் 38 சதவீதமாகவும் உள்ளன. பயிர்ப்பரப்பில் நெல் தொடர்ந்து முதன்மை நிலை வகித்து வருகிறது. 2019-20ல் மொத்த பயிர்ப் பரப்பில் 32.1 சதவீதமாகவும் இருந்த நெல்லின் பங்கு 2023-24ல் 34.4 சதவீதம் ஆக அதிகரித்துள்ளது.

7) தமிழக விவசாயிகளுக்கு பட்டியலிடப்பட்ட வணி வங்கிகள் வாயிலாக வழங்கப்படும் கடன் 2019-20ல் ரூ.1.83 லட்சம் கோடியிலிருந்து, 2023-24ல் ரூ.3.58 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது.

8) 2024-ம் ஆண்டில் உலக முதலீட்டாளர் மாநாடு நடத்தப்பட்டு ரூ.6.64 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 14.55 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

9) 2019-20 முதல் 2023-24 வரையான காலத்தில் தமிழ்நாட்டின் தொழில் துறைக்கு வர்த்தக வங்கிகள் அளித்துள்ள கடன் ரூ.2.5 லட்சம் கோடியிலிருந்து ரூ.3.01 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. அந்நிய நேரடி முதலீடு ரூ.5,909 கோடியிலிருந்து ரூ.20,157 கோடியாக அதிகரித்துள்ளது.

10) 2005-06 முதல் 2022-23 வரையான காலத்தில் தமிழ்நாட்டின் வறுமை நிலை (ஹெச்சிஆர்) 36.54 சதவீதத்தில் இருந்து வெறும் 1.43 சதவீதமாக வெகுவாக குறைந்துள்ளது.

11) சமூகத் துறைக்கான செலவினங்களை தமிழக அரசு தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளது. 2019-20ல் ரூ.79,859 கோடியாக இந்த ஒதுக்கீடு, 2022-23 ஆம் ஆண்டில் ரூ.1.16 லட்சம் கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது, என்பது உள்ளிட்ட பல்வேறு முக்கிய அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

# பரவலான வளர்ச்சியை உறுதி செய்யும் பட்ஜெட்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு

சென்னை, மார்ச் 14-

**பட்ஜெட் பரவலான வளர்ச்சியை உறுதி செய்யும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

தமிழக சட்டசபையில், இந்த ஆண்டுக்கான முதல் கூட்டம் கடந்த ஜனவரி மாதம் கூடியது. கவர்னர் ஆர்.என்.ரவி உரை நிகழ்த்தும் நிகழ்வோடு தொடங்கி அந்த கூட்டத்தொடர் முடிவுக்கு வந்தது. சட்டசபையின் அடுத்த கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது. காலை 9.30 மணிக்கு சட்டசபையில் 2025-2026-ம் ஆண்டுக்கான பட்ஜெட்டை நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்கிறார். சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில் இந்த பட்ஜெட்டில் மக்களை கவருவதற்கான பல்வேறு திட்டங்கள் இடம்பெற அதிக வாய்ப்பு உள்ளது. அந்த வகையில் இந்த பட்ஜெட், மக்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்தநிலையில், சமூகத்தின் அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் பட்ஜெட் அமைய உள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். தமிழ்நாட்டின் பரவலான வளர்ச்சியை உறுதி செய்யும் பட்ஜெட் என்று அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

### தமிழகம் முழுவதும் 936 இடங்களில்

# பட்ஜெட்டை நேரலையில் ஒளிபரப்ப திட்டம்

சென்னை, மார்ச் 14-

**தமிழ்நாடு அரசின் 2025-26 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையானது தமிழகம் முழுவதும் 936 இடங்களில் நேரடி ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது.**

தமிழ்நாடு அரசின் 2025-26 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 936 இடங்களில் இன்று (மார்ச் 14) காலை 9.30 மணி முதல் ஒளிபரப்பப்படுகிறது. மேலும், 15.03.2025 (சனிக்கிழமை) அன்று காலை 9.30 மணி முதல் வேளாண் நிதிநிலை அறிக்கையும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் எல்.இ.டி. திரையின் வாயிலாக நேரடி ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது.

சென்னையில் சென்ட்ரல் மற்றும் எழும்பூர் ரயில் நிலையம், முரசொலி மாறன் பூங்கா, அண்ணா நகர் கோபுர பூங்கா, கோயம்பேடு பேருந்து நிலையம், பாண்டி பஜார் சாலை, வள்ளுவர் கோட்டம், கத்திப்பாரா பூங்கா, மெரீனா, பெசன்ட் நகர், திருவான்மியூர், பாலவாக்கம், நீலாங்கரை, அக்கரை கடற்கரை, டைடல் பார்க் சந்திப்பு உள்ளிட்ட 100 இடங்களில் நேரடியாக ஒளிபரப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தமிழகம் முழுவதும் 936 இடங்களில் பட்ஜெட் நேரடி ஒளிபரப்பு செய்ய திட்டமிட்டு இருப்பது, நிதிநிலை அறிக்கையில் முக்கிய அம்சங்கள் இடம்பெறும் என்று மக்கள் மத்தியில் அதிக எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

தமிழக சட்டப்பேரவை அடுத்த ஆண்டு பொதுத் தேர்தலை எதிர்நோக்கி இருக்கிறது. அத்துடன் அடுத்த ஆண்டு தாக்கல் செய்யப்படும் நிதிநிலை அறிக்கையும் இடைக்கால நிதிநிலை அறிக்கையாகவே இருக்கும். எனவே, 16-ஆவது சட்டப்பேரவைக் காலத்தில் திமுக தலைமையிலான அரசு தாக்கல் செய்யும் இறுதி மற்றும் முழுமையான நிதிநிலை அறிக்கை இதுவாகும். இதனால் நிதிநிலை அறிக்கை மீதான எதிர்பார்ப்பு அனைத்துத் தரப்பினரிடமும் மேலோங்கி இருக்கிறது.

### ரூபாய் அடையாளக் குறியீட்டுக்குப்பதில்

# 'ரூ' - தமிழை முதன்மைப்படுத்தி பட்ஜெட் இலச்சினை வெளியீடு

சென்னை, மார்ச் 14-

ரூபாய் அடையாளக் குறியீட்டிற்கு ('₹') பதில் தமிழ் எழுத்தான 'ரூ' என்பதை முதன்மைப்படுத்தி பட்ஜெட் இலச்சினை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டசபையில் 2025-2026ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை இன்று தாக்கல் செய்யப்பட உள்ள நிலையில், தமிழ்நாடு அரசின் மாநில திட்டக் குழு சார்பில் தயாரிக்கப்பட்ட தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை 2024-25-யை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் நேற்று வெளியிட்டார்.

பொருளாதார ஆய்வு அறிக்கையை தமிழ்நாடு அரசு வெளியிடுவது இதுவே முதல்முறை ஆகும். இந்நிலையில் ரூபாய் அடையாளக் குறியீட்டிற்கு ('₹')பதில் தமிழ் எழுத்தான 'ரூ' என்பதை முதல்வர் மு.க.ஸ்டாலின் முதன்மைப்படுத்தி உள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ்வலைதளத்தில், "சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் தமிழ்நாட்டின் பரவலான வளர்ச்சியை உறுதி செய்திட... என்று கூறியிருப்பதோடு, பட்ஜெட்டை முன்னிட்டு 'எல்லார்க்கும் எல்லாம்' எனும் தலைப்பில் வீடியோ ஒன்றையும் பதிவிட்டுள்ளார்.

ரூபாய்க்கான அடையாளக் குறியீட்டிற்கு பதில், தமிழ் எழுத்தான 'ரூ' என்பதை முதன்மைப்படுத்தி இந்த பதிவு வெளியிடப்பட்டுள்ளது. மொழி சர்ச்சை நீடிக்கும் நிலையில் தமிழ் மொழியை முதன்மைப்படுத்தி பட்ஜெட் இலச்சினை வெளி யி டப் பட் டுள் ளது குறிப்பிடத்தக்கது.

### ஒரு பவுன் ரூ.65 ஆயிரத்தை நெருங்கியது:

# தங்கம் விலை புதிய உச்சம்

சென்னை, மார்ச் 14-

**சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று (மார்ச் 13) சவரனுக்கு ரூ.440 அதிகரித்து புதிய உச்சத்த்தை தொட்டுள்ளது.**

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை ஏற்ற, இறக்கமாக இருந்து வந்த நிலையில் சனிக்கிழமை சவரன் ரூ.64,320-க்கும், திங்கள்கிழமை ரூ.64,400-க்கும் விற்பனையானது. செவ்வாய்க் கிழமை ரூ. 64,160-க்கும் விற்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் (புதன்) அதிரடியாக ரூ. ரூ.360 உயர்ந்து ரூ.64,520-க்கு விற்பனையானது.


இந்த நிலையில், சென்னையில் வியாழக்கிழமை காலை ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு அதிரடியாக ரூ. 440 உயர்ந்து, ரூ. 64,960 என்ற புதிய உச்சத்தை தொட்டுள்ளது. ஒரு கிராமுக்கு ரூ. 55 அதிகரித்து ரூ. 8,120-க்கு விற்பனை செய்யப்பட்டு வருவதால் மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இதனிடையே, வெள்ளியில் விலை புதன்கிழமை காலை ரூ. 2 அதிகரித்த நிலையில், நேற்றும் அதிரடியாக ஒரு ரூபாய் அதிகரித்துள்ளது. ஒரு கிராம் வெள்ளி ரூ. 110-க்கும் ஒரு கிலோ ரூ. 1,10,000-க்கு விற்பனையானது.


## மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE |
|---|---|
| ↓ -200.85 | ↑ -73.30 |
| பாயிண்ட் 73,828.91 | பாயிண்ட் 22,397.20 |



**தங்கம்**
1 சவரன் ₹ 64,960
1 கிராம் ₹ 8,120



**வெள்ளி**
1 கிலோ ₹ 110,000
1 கிராம் ₹ 110.00

**டாலர்** ₹ 86.96


**பெட்ரோல்** ₹ 100.75
**டீசல்** ₹ 92.34



# கனடாவின் புதிய பிரதமராக கார்னி இன்று பதவியேற்பு

**கனடா, மார்ச் 14-**

கனடா பிரதமராக மார்க் கார்னி இன்று பதவியேற்கிறார்.



கனடாவின் 24-வது பிரதமராக மார்க் கார்னி இன்று பதவியேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பதவியேற்பு விழா தொடர்பான அறிவிப்பை ஆளுநர் ஜெனரல் மேரி சைமன் அலுவலகம் புதன்கிழமை வெளியிட்டுள்ளது. முன்னதாக கனடாவின் பிரதமராகவுள்ள ஜஸ்டின் ட்ரூடோ, முறைப்படி ராஜிநாமா கடிதத்தை ஆளுநரிடம் சமர்ப்பிக்கவுள்ளார்.

கனடாவின் பிரதமராக இருந்த ஜஸ்டின் ட்ரூடோ கடந்த ஜனவரி 7 ஆம் தேதி தனது பதவியை ராஜிநாமா செய்தார். அவரே லிபரல் கட்சியின் தற்போதைய தலைவராகவும் பதவி வகிக்கும் சூழலில், லிபரல் கட்சியின் தலைமைப் பதவிக்கான போட்டியில் முன்னாள் மத்திய வங்கித் தலைவரான மார்க் கார்னி வெற்றிபெற்றார். இதையடுத்து, கனடாவின் 24-வது பிரதமராகவும் லிபரல் கட்சியின் அடுத்த தலைவராகவும் மார்க் கார்னி தேர்தெடுக்கப்பட்டார்.

இந்த நிலையில், பதவியேற்பு நிகழ்வு குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. தற்போதுள்ள அமைச்சர்களையே மார்க் கார்னி தக்க வைத்துக் கொள்வார் என்று எதிர்பார்க்கப் படுகிறது. நிதியமைச்சர் டொமினிக் லெப்லாங்க், வெளியுறவு அமைச்சர் மெலானி ஜோலி மற்றும் தொழில்துறை அமைச்சர் பிரான்சுவா பிலிப் ஷாம்பெயின் ஆகிய முக்கிய அமைச்சர்கள் தொடர்ந்து பதவியில் நீடிப்பார்கள் எனத் தெரிகிறது.

கனடாவை அமெரிக்காவின் மாகாணமாக்கும் டிரம்பின் திட்டத்துக்கு மத்தியில், மார்க் கார்னி புதிய பிரதமராக பொறுப்பேற்கவுள்ளார். தேர்தலில் வெற்றி பெற்ற கார்னி, ''அமெரிக்கா தரப்பு கனடாவுக்கு உரிய மரியாதையை அளிக்கும் வரையில் அவர்களது நடவடிக்கைகளைப் பின்பற்றி, அமெரிக்க பொருள்களுக்கு கூடுதல் வரி விதிக்கப்படும்'' என்று திட்டவட்டமாக தெரிவித்திருந்தார். அமெரிக்காவின் வரி விதிப்பை கனடாவின் புதிய பிரதமர் எப்படி கையாளப் போகிறார் என்று சர்வதேச அளவில் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

# உக்ரைனின் கட்டுப்பாட்டில் இருந்த நகரத்தை கைப்பற்றியது ரஷ்யப்படை

**மாஸ்கோ, மார்ச் 14-**

உக்ரைனின் கட்டுப்பாட்டில் இருந்த நகரத்தை ரஷியா கைப்பற்றியது.

உக்ரைன் -ரஷியா இடையேயான போர் தொடர்ந்து நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இந்த போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் முயற்சித்து வருகிறார். அதேவேளை, போர் நிறுத்த உடன்பாட்டிற்கு வர உக்ரைனுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் அந்நாட்டிற்கு வழங்கி வந்த ராணுவ உதவி, உளவு தகவல்களை அமெரிக்கா நிறுத்தியது.

மேலும், போர் நிறுத்தம் தொடர்பாக உக்ரைன், அமெரிக்கா ஆகிய நாடுகள் சவுதி அரேபியாவில் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. அந்த வகையில் நேற்றுமுன்தினம் நடந்த பேச்சுவார்த்தையில் ரஷியா உடனான போரை 30 நாட்களுக்கு தற்காலிகமாக நிறுத்த உக்ரைன் சம்மதம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கடந்த ஆகஸ்ட் 2024-ம் ஆண்டு எதிர்பாராத எல்லை தாண்டிய தாக்குதலுக்குப் பிறகு உக்ரைன் ராணுவத்தால் கைப்பற்றப்பட்ட குர்ஸ்க் பிராந்தியத்தின் மிகப்பெரிய நகரமான சுட்ஜாவை கைப்பற்றி உள்ளதாக ரஷியாவின் பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது. குர்ஸ்க் பிராந்தியத்தில் தங்கள் கடைசி நிலையிலிருந்து உக்ரைன் ராணுவ வீரர்களை விரட்டியடிக்க, ரஷிய ராணுவம் நெருங்கி உள்ளநிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. முன்னதாக ரஷிய அதிபர் விளாடிமிர் புதின் பிராந்தியத்தில் உள்ள ராணுவத் தலைமையகத்திற்குச் சென்று அங்குள்ள ராணுவத் தளபதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இருந்தது குறிப்பிடத்தக்கது.



முதல்வர் மு.க.ஸ்டாலினை தலைமைச் செயலகத்தில், டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் சௌமியா சாமிநாதன் சந்தித்து, சென்னை, போரூர், ராமாபுரத்தில் டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்களின் பெயரில் அண்மையில் ஈரநில பசுமை பூங்கா திறந்து வைத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டார். இந்நிகழ்வின்போது, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, பி.கே.சேகர் பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் டாக்டர் எஸ். பிரபாகர், முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம் ஆகியோர் உடனிருந்தனர்.

## சென்னையில் சோக சம்பவம்:

# 5 கோடி ரூபாய் கடன் தொல்லையால் மருத்துவர் குடும்பத்துடன் தற்கொலை

**சென்னை, மார்ச் 14-**

சென்னை அண்ணாநகரில் மருத்துவர் அவரது மனைவி மற்றும் 2 மகன்கள் மர்மமான முறையில் இறந்து கிடந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு பகுதியைச் சேர்ந்தவர் மருத்துவர் பாலமுருகன் ( வயது53). இவர் சென்னையில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வந்தார். தொழில் நிமித்தமாக கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அண்ணா நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வாடகைக்கு குடியேறினார். இவரது மனைவி சுமதி உயர் நீதிமன்ற வழக்கறிஞர். இந்த தம்பதியின் மூத்த மகன் ஜஸ்வந்த் குமார் (19). பனிரெண்டாம் வகுப்பு முடித்துவிட்டு நீட் தேர்வுக்கு தயாராகி வந்தார். மற்றொரு மகன் லிங்கேஷ்குமார்( 17 ) தனியார் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வந்தார்.



இந்த நிலையில் வீட்டு வேலைக்கார பெண்மணி ரேவதி, நேற்று (மார்ச் 13) காலை மருத்துவர் பாலமுருகனின் வீட்டுக்கு வந்துள்ளார். ஆனால் கதவு உள்பக்கமாக தாழிடப்பட்டு இருந்தது. இதையடுத்து ரேவதி, டாக்டரின் டிரைவர் விஜய், மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு காவலாளி ஜெயராமன் மூன்று பேரும் சேர்ந்து கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்த போது சுமதியும் ஜஸ்வந்த் குமாரும் ஒரு அறையிலும், பாலமுருகன் மற்றொரு அறையிலும், சிறிய மகன் லிங்கேஷ்குமார் பூஜை அறையிலும் மின்விசிறியில் தூக்கில் தொங்கிய நிலையில் இறந்து கிடந்தனர். தகவல் அறிந்த திருமங்கலம் போலீஸார் நான்கு பேரின் உடல்களையும் கைப்பற்றி கீழ்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இது தொடர்பாக போலீஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில், ஸ்கேன் சென்டர் தொழிலை விரிவாக்க 5 கோடி ரூபாய் வரை வங்கிகளில் பாலமுருகன் கடன் பெற்றிருந்ததாகவும், இதற்காக, மாதம் 6 லட்சம் ரூபாய் வரை இ.எம்.ஐ . செலுத்தி வந்ததும் தெரிய வந்ததுள்ளது. ஆனால் எதிர்பார்த்த அளவுக்கு ஸ்கேன் சென்டர் தொழில் நடக்கவில்லை. இதனால் கடனை திருப்பி செலுத்த முடியாமல் தவித்த பாலமுருகன், இரவு உணவுக்குப் பின், இந்த விபரீத முடிவை எடுத்துள்ளது தெரியவந்துள்ளது. மருத்துவர் பாலமுருகனை பார்க்க, அவரது வீட்டுக்கு பலர் வந்து போவதுண்டு. அந்த வகையில் கடன் கொடுத்தவர்கள் யாரேனும் வீட்டுக்கு வந்து மிரட்டி விட்டு சென்றார்களா? என்ற கோணத்திலும் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஸ்பேஸ் எக்ஸ் விண்கலம் ஏவப்படவில்லை:

# சுனிதா வில்லியம்ஸ் பூமிக்கு திரும்புவதில் மீண்டும் தாமதம்

**அமெரிக்கா, மார்ச் 14-**

விண்வெளியில் உள்ள சுனிதாவில்லியம்ஸ் பூமிக்கு திரும்புவதில் மீண்டும் தாமதம் ஏற்பட்டுள்ளது.



அமெரிக்காவின் போயிங் உருவாக்கிய ஸ்டார்லைனர் விண்கலம், இந்திய வம்சாவளி விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பட்ச் வில்மோருடன் சர்வதேச விண்வெளி நிலையத்தை கடந்த ஆண்டு ஜூன் 5-ஆம் தேதி அடைந்தது. ஒன்பது நாள்களுக்குப் பிறகு ஸ்டார்லைனர் மூலமே அவர்கள் இருவரும் பூமிக்குத் திரும்புவதாக இருந்தது. ஆனால், ஸ்டார்லைனரில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணாக அவர்களால் திட்டமிட்டபடி பூமி திரும்ப முடியவில்லை.

இதன் காரணமாக, அவர்கள் இருவரும் கடந்த 9 மாதங்களாக பூமிக்கு அப்பால் விண்வெளியில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்தில் பாதுகாப்பாக தங்கியிருந்து ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். இந்த நிலையில், அவர்கள் இருவரையும் அழைத்து வருவதற்காக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் உருவாக்கிய டிராகன் விண்கலம் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து ஏவப்படுவதாக திட்டமிடப்பட்டிருந்தது.

இந்த விண்கலத்தில் அமெரிக்கா, ரஷியா, ஜப்பான் நாடுகளைச் சேர்ந்த 4 விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி மையத்துக்கு சுனிதா மற்றும் பட்ச்சுக்கு மாற்றுவீரர் களாக அனுப்பப்படவிருந்தது. ஆனால், கடைசி நேரத்தில் ஹைட்ராலிக் அமைப்பில் விஞ்ஞானிகள் கோளாறு இருப்பதை கண்டுபிடித்ததால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. விண்ணில் ஏவப்படுவதற்கான புதிய தேதி அறிவிக்கப் படவில்லை, இருப்பினும், மீண்டும் விண்ணில் ஏவுவதற்கான முயற்சி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இத்தாலியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

**நேப்பிள்ஸ், மார்ச் 14-**

இத்தாலி நாட்டின் நேப்பிள்ஸ் நகரத்தில் 40 ஆண்டுகளில் இல்லாத அளவிலான சக்தி வாய்ந்த நிலநடுக்கம் நேற்று நிகழ்ந்துள்ளது.

நேப்பிள்ஸ் நகரத்தில் நேற்று அதிகாலை 1.25 மணியளவில் 4.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், கடந்த 40 ஆண்டுகளில் இதுதான் அந்நகரத்தில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து இத்தாலியின் தேசிய புவி இயற்பியல் மற்றும் எரிமலையியல் நிறுவனம் கூறியதாவது, நிலநடுக்கம் அபாயமுள்ள பகுதியான ஃப்ளெக்ரேயன் வயல்களின் பொஸ்ஸோலி பகுதியில் 3 கி.மீ. ஆழத்தில் இந்த நில அதிர்வானது பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளது.

இந்நிலையில், இந்த நிலநடுக்கம் ஏற்பட்ட போது அம்மாகாணம் முழுவதும் பயங்கர சத்தத்துடன் அபாய ஒலிகள் தொடர்ந்து ஒலித்ததாகவும் சில இடங்களில் பயங்கர அதிர்வுகள் உணரப்பட்டதாகவும் அப்பகுதிவாசிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து வெளியான புகைப்படங்களில் அப்பகுதியிலுள்ள சில கட்டடங்கள் இடிந்து கீழே நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களின் மீது விழுந்து சிதைந்திருப்பது பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பக்னோலி மாவட்டத்தில் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கிய மக்களை மீட்புப் படையினர் பத்திரமாக மீட்டு வருகின்றனர். இருப்பினும், இந்த நிலநடுக்கத்தின் பாதிப்புகள் குறித்த தெளிவான தகவல்கள் தற்போது வரை தெரிவிக்கப்படவில்லை.

# உக்ரைனுக்கு மீண்டும் ராணுவ உதவி வழங்க அமெரிக்கா முடிவு

**உக்ரைன், மார்ச் 14-**

உக்ரைனுக்கு மீண்டும் ராணுவ உதவிகளை வழங்க அமெரிக்கா முடிவெடுத்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உக்ரைன் - ரஷியா இடையே போர்நிறுத்தம் தொடர்பாக சவுதி அரேபியாவில் அமைதி பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில், கலந்துகொண்ட உக்ரைன் அதிபர் அலுவலகத்தின் துணைத் தலைவரும் தூதுக்குழு உறுப்பினருமான பாவ்லோ பாலிசா, “பேச்சுவார்த்தையின்போது எழுப்பப்பட்ட கோரிக்கைகள் செயல்பாட்டுக்கு வந்துள்ளன” எனக் குறிப்பிட்டதாக உக்ரைன் செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. உக்ரைனுடனான உளவுத் துறை தொடர்புகளை இடைநிறுத்தம் செய்திருந்த அமெரிக்கா தற்போது அதனை நீக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

உக்ரைன் அதிபர் ஸெலென்ஸ்கி சில நாள்களுக்கு முன்பு வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் டிரம்ப்பிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து உக்ரைனுக்கான தனது இராணுவ உதவியை அமெரிக்கா நிறுத்தியது. இதனைத் தொடர்ந்து, டிரம்ப்புக்கு ஸெலென்ஸ்கி மன்னிப்புக் கடிதம் அனுப்பியதாகக் கூறப்பட்டது. இந்நிலையில், சவுதி அரேபியாவில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் அமெரிக்கா உக்ரைனுக்கு பாதுகாப்பு உதவியை மீண்டும் வழங்கும் என்று தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தை 8 மணி நேரம் நீடித்தது. இதில், அமெரிக்காவால் முன்மொழியப்பட்ட 30 நாள் போர்நிறுத்தத் திட்டத்தை உக்ரைன் ஏற்றுக் கொண்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

# ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம்

**காபுல், மார்ச் 14-**

ஆப்கானிஸ்தானில் நேற்று மதியம் 1.58 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

ஆப்கானிஸ்தானில் நேற்று மதியம் திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. மதியம் 1.58 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.0 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. 10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 36.69 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 69.70 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

# சிறந்த கல்வி நிறுவனங்கள் பட்டியலில் வேலூர் வி.ஐ.டி. பல்கலை. முன்னேற்றம்

**வேலூர், மார்ச் 14-**

சர்வதேச அளவில் சிறந்த கல்வி நிறுவனங்களின் பட்டியலில் வேலூர் வி.ஐ.டி. பல்கலைக்கழகம் 142-வது இடத்தைப் பிடித்துள்ளது.

இது தொடர்பாக வேலூர் வி.ஐ.டி. பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: பல்வேறு நாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்கள், அவற்றின் கல்வித்தரம். ஆசிரியர்கள் நன்மதிப்பு, ஆராய்ச்சிக் கட்டுரைகள், சர்வதேச ஆராய்ச்சி வலையமைப்பு உள்ளிட்ட காரணிகளின் அடிப்படையில், ஆண்டுதோறும் சிறந்த கல்வி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலை க்யூ.எஸ் என்ற சர்வதேச நிறுவனம் வெளியிட்டு வருகிறது. அதனடிப்படையில், நடப்பாண்டு இந்த அமைப்பு வெளியிட்ட தரவரிசைப் பட்டியலில் பொறியியல், தொழில்நுட்பத்தில் சர்வதேச அளவில் வேலூர் வி.ஐ.டி பல்கலைக்கழகம் 142-வது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த ஆண்டைவிட 70 இடங்கள் முன்னேறியுள்ளது.

இதேபோல, தேசிய அளவில் வி.ஐ.டி பல்கலைக்கழகம் 9-வது இடம் பிடித்து உள்ளது. இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**14-03-2025**




**மேஷம்:-** உங்கள் செயல்களில் வெற்றி பெற மிகுந்த அக்கறை எடுக்க நேரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும், முன்னேற்ற வாய்ப்புகள் கதவைத் தட்டும். பயணத்தில் தடைகள் ஏற்படலாம்.

**ரிஷபம்:-** நன்கு பழகிய நண்பர்களே மோசம் செய்வார் எனவே, எவரிடமும் எச்சரிக்கையாக இருக்கவும். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்க வேண்டிய நாள். காரியத் தடைகள் ஏற்பட்டு ஆர்வம் குறையும்.

**மிதுனம்:-** தனலாபம், குடும்பத்தில் நிம்மதி, சுகம் ஆகியவை அதிகரிக்கும். மனத்தெம்பும், மன மகிழ்ச்சியும் ஏற்படும். மனைவியின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பணவரவு உண்டு.

**கடகம்:-** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். குடும்பத்தினரிடையே வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. கவனமாகப் படித்தால் கல்வியில் சிறப்புண்டு.

**சிம்மம்:-** உங்கள் இனிய பேச்சு சாதுர்யத்தால் எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி அடைவீர்கள். வியாபாரிகளுக்கு பேச்சே மூலதனமாகும். அரசால் ஆதாயம் உண்டு.

**கன்னி:-** பெண்களால் பணம் விரயமாகும். கோபத்தைக் குறைப்பது நல்லது. திறமையுடன் செயல்பட்டாலும் இகழ்ச்சியே மிஞ்சும். வியாபாரிகளுக்கு இலாபங்கள் ஓரளவு குறையும்.

**துலாம்:-** திருமணம் போன்ற சுபகாரியங்கள் மற்றும் எல்லா வகையிலும் நன்மைகள் ஏற்படும். பெண்களால் லாபம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு.

**விருச்சிகம்:-** தனலாபம், புதிய நண்பர்கள் சேர்க்கை என புதிய உற்சாகங்கள் பொங்கும். தொழில் விரிவாக்கத்துக்கு அரசு ஆதரவும், அதிகாரிகளால் அனுகூலம் ஏற்படும்.

**தனுசு:-** தொழில், வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படும். கவனமாக இருக்கவும். பெண்ணால். குடும்பத்தில் கலகம் உருவாகலாம். வழக்குகளில் வெற்றி கேள்விக் குறியாகும்.

**மகரம்:-** அரசிடம் இருந்து எதிர்பார்க்கும் உதவிகள் தாமதப்படும். வேண்டாத விவகாரங்களால் மனக்கவலை ஏற்படலாம். மனைவியால் குடும்பத்தினரிடையே ஒற்றுமை குறையலாம்.

**கும்பம்:-** வாகன, போஜன சுகங்கள் கூட, அவருக்கு என்ன பெரிய ஆள் எனப் பெயர் பெறுவீர்கள். காதல் வலையில் விழ நேரலாம். மனைவி மூலம் நன்மைகள் ஏற்படும்.

**மீனம்:-** பால்ய நண்பரை சந்தித்து மகிழ்வீர்கள். இதுவரை இருந்து வந்த உடல் உபாதைகள் நீங்கும். எதிர்பார்த்த இடங்களில், இருந்து எதிர்பார்த்த தனவரவு உண்டாகும்.

## போர் நிறுத்தத்தை ஏற்காவிட்டால்...

# ரஷ்யாவுக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை

**வாஷிங்டன், மார்ச் 14-**

சவுதி அரேபியாவில் நடந்த அமெரிக்கா - உக்ரைன் பேச்சுவார்த்தையில் உக்ரைன் ஒப்புதல் அளித்துள்ள ஒருமாத போர் நிறுத்தத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால் ரஷ்யா குறிப்பிடத்தகுந்த பொருளாதார தடைகளை சந்திக்க வேண்டியது இருக்கும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

வெள்ளைமாளிகையில் கடந்த புதன்கிழமை செய்தியாளர்களை சந்தித்த ட்ரம்ப் கூறுகையில், “எங்களுடைய பிரதிநிதிகள் ரஷ்யாவுக்குச் செல்ல இருக்கின்றனர். ரஷ்யா போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொள்ளும் என்று நான் நம்புகிறேன். ரஷ்யாவுக்கு பேரழிவினை ஏற்படுத்தும் அந்நாட்டுக்கு மோசமான விளைவுகளை உண்டாக்கும் காரியங்களை என்னால் செய்ய முடியும். அம்முடிவினை நான் விரும்பவில்லை. ஆனால் நான் அமைதியைக் காண விரும்புகிறேன். என்று தெரிவித்தார்.

முன்னதாக, சவுதி அரேபியாவில் அமெரிக்காவுடன் நடந்த பேச்சுவார்த்தையில் அந்நாடு முன்மொழிந்த 30 நாள் போர் நிறுத்தத்துக்கு உக்ரைன் ஒப்புக் கொண்டது. ரஷ்யாவுடன் உடனடியாக பேச்சுவார்த்தையில் ஈடுபடவும் உக்ரைன் சம்மதம் தெரிவித்திருந்தது. இந்த போர்நிறுத்த ஒப்பந்தம், நிலம், கடல் மற்றும் வான்வழித் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறது. ஆனால் ரஷ்யா இதுகுறித்து இன்னும் உறுதியான நிலைப்பாட்டினை எடுக்கவில்லை. ஒரு முடிவினை எட்டுவதற்கு முன்பாக அமெரிக்காவிடமிருந்து கூடுதல் தகவலுக்காக காத்திருப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

# இந்திய எல்லையில் பாக்., டிரோன்கள் வீசிய போதைப் பொருள்கள்பறிமுதல்

**ஜெய்ப்பூர், மார்ச் 14-**

ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள இந்திய எல்லையில் பாகிஸ்தானிலிருந்து டிரோன் மூலம் கடத்தப்பட்ட போதைப் பொருள் பொட்டலங்களை எல்லைப் பாதுகாப்புப் படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

பாகிஸ்தானிலிருந்து கட்டுப்படுத்தப்பட்ட டிரோன் ஒன்று நேற்றுமுன்தினம் ஸ்ரீ கங்காநகர் மாவட்டத்தின் கஜ்சிங்பூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் பறப்பதாக அப்பகுதி மக்கள் சிலர் காவல் துறையினருக்கு தகவல் அளித்தனர். அந்த புகாரின் அடிப்படையில் எல்லைப் பாதுகாப்புப் படை மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையினர் இணைந்து அப்பகுதியிலுள்ள வயல்கள் முழுவதும் சோதனை மேற்கொண்டனர்.

இந்நிலையில், நேற்று காலை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் பாகிஸ்தானிலிருந்து கட்டுப்படுத்தப்பட்ட டிரோன் மூலம் இந்திய எல்லைக்குள் சுமார் 2.5 கி.மீ. தொலைவுக்கு ஊடுறுவி அப்பகுதியிலுள்ள கோதுமை வயலில் வீசப்பட்ட மர்ம பொட்டங்களைப் பாதுகாப்புப் படையினர் பறிமுதல் செய்தனர். பின்னர், பறிமுதல் செய்யப்பட்ட பொட்டலத்தை சோதனை செய்ததில் அதில் 1.116 கிலோ அளவிலான ஹெராயின் எனும் போதைப் பொருள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த போதைப் பொருளின் மதிப்பானது இந்திய ரூ.5 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், இன்னும் சில ஹெராயின் பொட்டலங்கள் அங்குள்ள வயல்களில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானிலிருந்து டிரோன் மூலம் போதைப் பொருள் கடத்தப்படுவதைத் தடுக்க எல்லைப் பாதுகாப்புப் படை, குற்றப் புலானாய்வுத் துறை மற்றும் கஜ்சிங்பூர் காவல் துறையினர் ஆகியோர் அப்பகுதிகளில் தடுப்புகளை அமைத்து தீவிர சோதனையில் ஈடுபட்டுள்ளனர். சமீபத்தில், பஞ்சாப்பில் டிரோன் மூலம் பாகிஸ்தானிலிருந்து போதைப் பொருள்களை கடத்தி அதனை மாநிலம் முழுவதும் விநியோகித்து வந்த ஒரு சிறுவன் உள்பட 3 பேரை காவல் துறையினர் கைது செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# வெற்று விளம்பரங்களால் மக்கள் வயிற்றை ஒருபோதும் நிரப்ப முடியாது

## எடப்பாடி பழனிசாமி விமர்சனம்

**சென்னை, மார்ச் 14-**

வெற்று விளம்பரங்களால் மக்கள் வயிற்றை நிரப்ப முடியாது என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:- திருப்பூர் மாவட்டம் அவிநாசி அருகே வயதான விவசாயத் தம்பதியினர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது. திருப்பூர் பகுதியில் இது போன்ற தொடர் குற்றங்கள் அதிகம் நடந்து கொண்டிருக்கிற நிலையில், தி.மு.க. அரசு கொலைகளை "தனிப்பட்ட பிரச்சினைகள்" என்று கடந்து செல்ல மட்டும் தானே முனைகிறீர்கள்.

வருமுன் காப்பதும் இல்லை - பட்டும் திருந்துவது இல்லை என்ற நிலையில் சட்டம் ஒழுங்கை தறிகெட்ட நிலைக்கு இட்டுச் சென்று, மக்களின் உயிரைக் கையில் பிடித்துக்கொள்ளும் அளவிற்கு தனிமனித பாதுகாப்பை கேள்விக்குறியாக்கியுள்ள ஸ்டாலின் மாடல் தி.மு.க அரசுக்கு எனது கடும் கண்டனம்.

தனது ஆட்சியில் நடக்கும் அனைத்து தவறுகளையும், எதை போட்டு மறைக்க, என தெரியாமல் , யாரொ கதை வசனம் எழுதி கொடுத்த திசை திருப்பும் நாடகங்களில் நடிக்க கிளம்பியிருக்கும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே வெற்று விளம்பரங்களால் மக்கள் வயிற்றை நிரப்ப முடியாது, சர்வாதிகாரி என்று தன்னை தானே சொல்லி கொண்டால் மட்டுமே சட்டம் ஒழுங்கை சீர் செய்து விட முடியாது. இரும்புக்கரம் என்று வீரவசனம் பேசினால் மட்டும் தனி மனித பாதுகாப்பை உறுதி செய்து விட முடியாது. தி.மு.க ஆட்சியில் மீதம் இருக்கின்ற சிறிது காலத்திலாவது, மக்கள் மீது உண்மையான அக்கறையுடன் ஆட்சி செய்து, சட்டம் ஒழுங்கில் கவனம் செலுத்தி, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சிதம்பரம் கோயில் தீட்சிதர்கள் மீதான வழக்கை ரத்து செய்ய ஐகோர்ட் மறுப்பு

**சென்னை, மார்ச் 14-**

சிதம்பரம் நடராஜர் கோயிலில் பக்தர்கள் கனகசபையில் நின்று தரிசனம் செய்வதை தடுத்த தீட்சிதர்களுக்கு எதிரான வழக்கை ரத்து செய்யக் கோரிய மனுவை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

சிதம்பரம் நடராஜர் கோயிலில் கடந்த 2023-ம் ஆண்டு ஜூன் மாதம் நடந்த ஆருத்ரா தரிசனத்தின்போது பக்தர்கள் கனகசபையில் நின்று தரிசனம் செய்ய அறநிலையத் துறை அனுமதி வழங்கியது. ஆனால், அந்த உத்தரவை மீறி பக்தர்களை கனகசபையில் நின்று தரிசனம் செய்ய விடாமல் தடுத்ததாக சில தீட்சிதர்கள் மீது சிதம்பரம் தில்லையம்மன் கோயில் செயல் அலுவலரான சரண்யா காவல்துறையில் புகார் அளித்தார்.

அதன் புகாரின்படி பொது ஊழியரை பணி செய்ய விடாமல் தடுத்தல், கொலை மிரட்டல் விடுத்தல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் பட்டு என்பவர் உள்ளிட்ட 6 தீட்சிதர்கள் மீது சிதம்பரம் நகர் போலீஸார் வழக்குப் பதிவு செய்திருந்தனர். இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி பட்டு உள்ளிட்ட 6 பேரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது காவல் துறை சார்பில் ஆஜரான அரசு குற்றவியல் வழக்கறிஞர் கோபி, "இந்த வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருவதால் வழக்கை ரத்து செய்யக் கூடாது" என ஆட்சேபம் தெரிவித்தார். இதையடுத்து நீதிபதி, வழக்கை ரத்து செய்ய மறுப்பு தெரிவித்து தீட்சிதர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

# த.வெ.க. வில் மாவட்ட செயலாளர்கள் எண்ணிக்கையை உயர்த்த விஜய் முடிவு?

**சென்னை, மார்ச் 14-**

த.வெ.க. மாவட்ட செயலாளர்கள் எண்ணிக்கையை 120ல் இருந்து 140ஆக உயர்த்த விஜய் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழக சட்டசபைக்கு அடுத்த ஆண்டு மே மாதம் தேர்தல் நடக்க இருக்கிறது. இந்த தேர்தலை எதிர்கொள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் தயாராகி வருகிறது. தமிழக அரசியலில் புதிய வரவான நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக்கழகமும் தேர்தலை சந்திக்க தீவிரம் காட்டி வருகிறது. இதற்கான முன்னெடுப்புகளை தமிழக வெற்றிக் கழகம் மேற்கொண்டுள்ளது. தற்போது கட்சியின் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்த திட்டமிட்டப்பட்டு, அதற்கான பணிகளை விஜய் முழு வீச்சில் செய்து வருகிறார்.

இதன்படி விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தில் படிப்படியாகக் கட்சி நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். இதுவரை 95 மாவட்டங்களுக்கு மாவட்டச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்நச் சூழலில் 6வது கட்டமாக இறுதிக் கட்ட மாவட்டச் செயலாளர்கள் பட்டியலை பனையூர் கட்சி அலுவலகத்தில் விஜய் நேரடியாக ஆலோசனை நடத்தும் நிலையில், அதன் பிறகே இறுதி மாவட்ட செயலாளர்கள் பட்டியல் வெளியாகும். என்று கூறப்படுகிறது. இந்நிலையில் த.வெ.க தலைவர் விஜய் கடைசி நேரத்தில் திடீர் மாற்றம் செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதன்படி மாவட்ட செயலாளர்கள் எண்ணிக்கையை 120ல் இருந்து 140ஆக உயர்த்த முடிவு செய்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீமான் வீட்டு காவலாளி, உதவியாளருக்கு ஜாமீன்

**சென்னை, மார்ச் 14-**

நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் உதவியாளர் அமல்ராஜ், பாதுகாவலர் சுபாகருக்கு சென்னை உயர்நீதி மன்றம் நிபந்தனை ஜாமீன் வழங்கியுள்ளது.

சீமான் வீட்டில் காவல்துறை ஒட்டிய சம்மன் கிழிக்கப்பட்ட விவகாரத்தில், சீமான் வீட்டு பணியாளர் சுபாகர் மற்றும் வீட்டுக் காவலாளி அமல்ராஜ் ஆகியோருக்கும், போலீஸாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதையடுத்து, சம்மனை கிழித்து பணி செய்யவிடாமல் தடுத்ததாகவும், போலீஸாரை தாக்கியதாகவும் இரு வெவ்வேறு வழக்குகள் பதியப்பட்டு இருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், அரசு அதிகாரிகளை பணி செய்யவிடாமல் தடுத்ததாக தொடரப்பட்ட வழக்கில் சீமான் உதவியாளர் அமல்ராஜ், பாதுகாவலர் சுபாகருக்கு சென்னை உயர்நீதிமன்றம் நிபந்தனை ஜாமீன் வழங்கியுள்ளது. மேலும், மறு உத்தரவு வரும் வரை இரண்டு பேரும் பூக்கடை காவல் நிலையில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

# தமிழ்நாட்டை இழிவுபடுத்துவதே மத்திய அரசின் கொள்கை முடிவு

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் காட்டம்

**சென்னை, மார்ச் 14-**

தமிழ்நாட்டையும், பெரியாரையும் இழிவுபடுத்துவதையே ஒரு கொள்கை முடிவாக வைத்துள்ளனர் என்று உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் சார்பில் தமிழ்நாடு புதுமைத் தொழில் முனைவோர் திட்டத்தின் இணைய முகப்பை சென்னையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.

அதன்பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் உதயநிதி ஸ்டாலின் கூறியதாவது:-

நாங்கள் என்ன நாகரிகம் அற்றவர்களா?. எங்களைப் பார்த்தால் அப்படித் தெரிகிறதா?. இப்படி சொல்பவர்கள் தான் நாகரிகமில்லாமல் தமிழர்களை விமர்சிக்கிறார்கள்.

வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் பதிலடி கொடுப்பார்கள். தமிழ்நாட்டையும், பெரியாரையும் இழிவுபடுத்துவது மத்திய அரசின் ஒரு பேர்ட்டன். இதையே ஒரு கொள்கை முடிவாக வைத்துள்ளனர்.

மும்மொழி கொள்கை விவகாரத்தில் எங்கள் நிலைப்பாடுகளை தொடர்ந்து பதிவு செய்து வருகிறோம். மும்மொழி கொள்கை விவகாரத்தை திசை திருப்பவே மத்திய அரசு அமலாக்கத்துறை சோதனை நடத்துகிறது. மொழிப்பிரச்சனை, கல்வி நிதி குறித்து பல மாதங்களாக பேசி வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

# ஸ்பேடெக்ஸ் செயற்கைக் கோள்களை வெற்றிகரமாக விடுவித்து இஸ்ரோ சாதனை

**புதுடெல்லி, மார்ச் 14-**

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தனது ஸ்பேடெக்ஸ் பரிசோதனையின் ஒரு பகுதியாக இரண்டு செயற்கைக் கோள்களை விடுவிக்கும் சோதனையை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது.

இந்தப் பரிசோதனை வெற்றிக்கு வழிவகுத்த நிகழ்வுகளின் தொகுப்புகளை இஸ்ரோ அதன் எக்ஸ் பக்கத்தில் விரிவாக வெளியிட்டுள்ளது. அவை, எஸ்.டி .எக்ஸ்.-2-ஐ பிரிப்பது, திட்டமிட்டபடி கேப்சர் லிவர் 3-ஐ விடுவிப்பது, எஸ்.டி .எக்ஸ்.-2-லிருந்து கேப்சர் லிவரின் தொடர்பைத் துண்டிப்பது, பிடிப்புகளை விடுவிக்கும் கட்டளைகளை இரண்டு செயற்கைக் கோள்களுக்கும் வழங்குவது உள்ளிட்ட செயல்முறைகள் உள்ளடங்கியது. இஸ்ரோவின் இந்த வெற்றியைப் பாராட்டி மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் ஜித்தேந்திர சிங் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

ஸ்பேஸ் டாக்கிங் பரிசோதனை திட்டம், கடந்த 2024 டிசம்பர் 30-ம் தேதி சதீஸ் தவான் விண்வெளி நிலையத்தில் இருந்து தொடங்கியது.

'சேஷர்' மற்றும் 'டார்கெட்' என்று அறியப்படும், எஸ்.டி .எக்ஸ்.01 மற்றும் எஸ்.டி .எக்ஸ்.02 செயற்கை கோள்களை விடுவிக்கும் பணி ஜனவரி 16-ம் தேதி தொடங்கியது.

அமெரிக்கா, ரஷ்யா, சீனாவைத் தொடர்ந்து விண்வெளி டாக்கிங் தொழில்நுட்பத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிய நான்காவது நாடு இந்தியா என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, இஸ்ரோ தலைவர் வி.நாராயணன், மற்ற ஸ்பேடெக்ஸ் திட்டத்தின் பரிசோதனைகள் மார்ச் 15-ம் தேதி முதல் தொடங்கும் என்று தெரிவித்திருந்தார். இஸ்ரோவின் கூற்றுப்படி, ஸ்பேடெக்ஸ் திட்டம் என்பது செலவு குறைந்த ஒரு திட்டப் பணியாகும். பிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் இரண்டு சிறிய செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவி ஸ்பேஸ் டாக்கிங்கை நிறுவுவதே இதன் நோக்கம். ஒரு பொதுவான நோக்கத்தை அடைய பல ராக்கெட்களை விண்ணில் ஏவுவதற்கு இந்த தொழில்நுட்பம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

# கியூட் தேர்வுக்கான வழிகாட்டுதல்கள்: தேசிய தேர்வு முகமை வெளியிட்டது

**புதுடில்லி, மார்ச் 14-**

முதுகலை பட்டப்படிப்பு நுழைவுத் தேர்வு (கியூட்) க்கான முக்கிய வழிகாட்டுதல்களை தேசிய தேர்வு முகமையான என்.டி.ஏ. வெளியிட்டுள்ளது.

நாட்டில் உள்ள மத்திய பல்கலைக்கழகங்களில் இளங்கலை, முதுகலை பட்டப்படிப்புகளில் மாணவர்களை சேர்க்க மத்திய மத்திய பல்கலைக்கழக பொது நுழைவுத் தேர்வு எனப்படும் (கியூட்) தேர்வை மத்திய அரசு நடத்தி வருகிறது.

முதுகலை பட்டப்படிப்புகளில் சேர்வதற்கான பொது பல்கலைக்கழக நுழைவுத் தேர்வுக்கு (கியூட்) விண்ணப்பித்த மாணவர்களுக்கான முக்கிய வழிகாட்டுதல்களை தேசிய தேர்வு முகமையான என்.டி.ஏ. வெளியிட்டுள்ளது. இந்தத் தேர்வுக்கு, ஜனவரி 2ஆம் தேதி தொடங்கிய விண்ணப்பப் பதிவு பிப்ரவரி வரை அவகாசம் வழங்கப்பட்டது.

2025ஆம் ஆண்டு மார்ச் 13 முதல் 31ஆம் தேதி வரை தேர்வு நடத்தப்பட உள்ளதாக தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. விண்ணப்பங்கள் முழுக்க முழுக்க ஆன்லைன் முறையில் பூர்த்தி செய்து அனுப்பப்பட்டுள்ளது. வெளிநாட்டுத் தேர்வு மையங்கள் உள்பட 312 நகரங்களில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்வுக்கு நேரத்துக்கு வர வேண்டும், தேர்வறை முழுக்க முழுக்க சிசிடிவி கண்காணிப்பில் இருக்கும். ஆதார் அட்டையைக் கொண்டு வர வேண்டும், தேர்வறையின் வாயில் மூடப்பட்ட பிறகு யாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் கையில் ஒரு குடிநீர் பாட்டில், பேனா, நுழைவுச் சீட்டு, கூடுதலாக ஒரு புகைப்படம், அடையாள அட்டையைக் கொண்டு வர வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர வேறு எந்த பொருள்களையும் மாணவர்கள் கொண்டு வர அனுமதிக்கப்படாது என்றும், அவ்வப்போது தேசிய தேர்வு முகமை இணையதளத்தை மாணவர்கள் பார்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## கூலி உயர்வு கோரி வரும் 19-ம் தேதி முதல்

# காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட திருப்பூர் விசைத்தறி நெசவாளர்கள் முடிவு

**திருப்பூர், மார்ச் 14-**

திருப்பூர் மாவட்ட கூலிக்கு நெசவு செய்யும் செய்யும் விசைத்தறி நெசவாளர்கள் சங்கம், கூலி உயர்வு கோரி மார்ச் 19 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தை அறிவித்துள்ளது.

திருப்பூர், கோவை மாவட்டங்களில் 2.50 லட்சம் விசைத்தறிகள் மூலம் 5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் நேரடியாகவும், மறைமுகமாகவும், வேலைவாய்ப்பு பெறுகின்றனர் . உதிரி பாகங்கள் விலை உயர்வு, மின் கட்டண உயர்வு, பெட்ரோல், டீசல் விலை உயர்வு, ஆள்கள் பற்றாக்குறை, தொழிலாளர்கள் கூலி உயர்வு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் விசைத்தறி தொழிலில் லாபம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், விசைத்தறியாளர்களுக்கு சரியான கூலி உயர்வு கிடைத்து 12 ஆண்டுகள் ஆகின்றன.

இதுகுறித்து கோவை, திருப்பூர் மாவட்ட கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர் சங்கத்தின் பொருளாளர் காரணம் பேட்டை எஸ்.இ. பூபதி கூறுகையில், கடந்த மூன்று ஆண்டுகளில் செலவுகள் கணிசமாக அதிகரித்துள்ளதால் புதிய கூலி உயர்வு கோரி வருகிறோம். மின் கட்டணங்கள், கட்டட வாடகை, விசைத்தறி உதிரி பாகங்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் அனைத்தும் கடுமையாக உயர்ந்துள்ளன.

1991 முதல் பேச்சுவார்த்தைகள் மூலம் விசைத்தறி கூலிகள் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றன. பிப்ரவரி 2022 இல், இரு தரப்பினரும் 15 சதவிகித கூலி உயர்வை ஒப்புக்கொண்டனர், ஆனால் ஜவுளி உற்பத்தியாளர்கள் அதை செயல்படுத்தவில்லை என கூறப்படுகிறது.

திருப்பூர் மாவட்ட நிர்வாகம் இரு தரப்பினரிடையே பேச்சுவார்த்தை நடத்தி பிரச்னையை சுமூகமாக தீர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

இதுகுறித்து தமிழ்நாடு தொழிலாளர் துறையின் உதவி ஆணையர் எஸ். பிரேமா கூறுகையில், கோவை, திருப்பூர் மாவட்டங்களில் செயல்படும் விசைத்தறிகளுக்கு 2014-ஆம் ஆண்டுக்குப் பின், உயர்த்தப்பட்ட கூலி சரிவர வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுள்ளது.

## வரும் 22-ம் தேதி சென்னையில் நடைபெறும்

# தொகுதி மறுசீரமைப்பு கூட்டத்தில் பங்கேற்கிறார் டி.கே. சிவகுமார்

**பெங்களூரு, மார்ச் 14-**

முதல்வர் மு.க.ஸ்டாலின் கூட்டி உள்ள அனைத்துக்கட்சி கூட்டத்தில் கர்நாடகா சார்பில் டி.கே. சிவகுமார் பங்கேற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தொகுதி மறுவரையறை தொடர்பாக கர்நாடக முதல்வர் சித்தராமையாவை அமைச்சர் பொன்முடி, எம்.பி. அப்துல்லா உள்ளிட்டோர் சந்தித்தனர். அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் கூட்டி உள்ள அனைத்துக்கட்சி கூட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்தனர்.

இதையடுத்து கர்நாடக முதல்வர் சித்தராமையாவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார். அப்போது தொகுதி மறுவரையறை தொடர்பான சென்னையில் வரும் 22-ந்தேதி நடைபெறும் அனைத்துக்கட்சி கூட்டத்தில் பங்கேற்குமாறு அவர் அழைப்பு விடுத்தார்.

இந்நிலையில், சென்னையில் நடைபெறும் அனைத்துக் கட்சி கூட்டத்தில் கர்நாடகா சார்பில் துணை முதல்வர் டி.கே. சிவகுமார் கலந்து கொள்வார் என்று முதல்வர் சித்தராமையா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கர்நாடக முதல்வர் சித்தராமையா கடிதம் எழுதியுள்ளார்.

# புதுச்சேரி சட்டசபையில் இருந்து தி.மு.க., காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் வெளிநடப்பு

**புதுச்சேரி, மார்ச் 14-**

அமைச்சர் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து, புதுச்சேரி சட்டசபையில் இருந்து தி.மு.க., காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் வெளிநடப்பு செய்தனர். புதுவை சட்டசபை நேற்று காலை 9.30 மணிக்கு கூடியது. சபையின் முதல் அலுவலாக கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது உறுப்பினர்கள் பேசினர் .

அப்போது பேசிய அமைச்சர் நமச்சிவாயம், தமிழகத்தில் மொழி போராட்டம் நடந்தது எப்போது தெரியுமா? காங்கிரஸ் ஆட்சியில் தான் தமிழகத்தில் மொழி போராட்டம் நடந்தது. இந்தியை திணித்ததும் காங்கிரஸ்தான். அவர்களோடுதான் கூட்டணியில் உள்ளீர்கள் என்றார்.. இதையடுத்து அமைச்சர் பேச்சுக்கு தி.மு.க., காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அமைச்சர் நமச்சிவாயத்துக்கு ஆதரவாக அமைச்சர்கள் தேனீ.ஜெயக்குமார், சாய்.ஜெ.சரவணன்குமார், எம்.எல்.ஏ.க்கள் கல்யாணசுந்தரம், வெங்கடேசன், ராமலிங்கம், அசோக்பாபு ஆகியோர் பேசினர்.

இதனால் சட்டசபையில் கடும் கூச்சல், குழப்பம், அமளி ஏற்பட்டது. சபாநாயகர் தொடர்ந்து மணி அடித்து சபையை கட்டுக்குள் கொண்டுவர முயன்றார்.

தொடர்ந்து, அமைச்சரின் பேச்சை கண்டித்து வெளிநடப்பு செய்வதாக எதிர்கட்சி தலைவர் சிவாகூறினார். அவருடன் சேர்ந்த தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள், காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் வெளியேறினர்.

# திருவனந்தபுரம் ஆற்றுக்கால் பகவதி அம்மன் கோயில்: லட்சக்கணக்கான பெண்கள் பொங்கலிட்டு வழிபாடு

**திருவனந்தபுரம், மார்ச் 14-**

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில், ஆற்றுக்கால் பகவதி அம்மன் கோயிலில், லட்சக்கணக்கான பெண்கள் குடும்பத்துடன் வந்து பொங்கலிட்டு வழிபாடு நடத்தி வருகிறார்கள்.

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் உள்ள ஆற்றுக்கால் பகவதி அம்மன் கோயிலில் வருடாந்திர பொங்கல் விழாவின் தொடக்கமாக கடந்த 6-ம் தேதி காப்பு கட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிலையில், நேற்று காலை முதல் கோயிலின் சுற்றுவட்டார பகுதிகளில் லட்சக்கணக்கான பெண்கள் பொங்கலிட்டு வழிபாடு நடத்தி வருகிறார்கள்.

காலை சுத்த புண்ணிய சடங்களுக்கு பின்னர், காலை 10.15 மணிக்கு, கோயில் முன்புள்ள பண்டார அடுப்பில் தீ மூட்டப்பட்டது. அதையடுத்து, பக்தர்கள் பொங்கலிடத் தொடங்கினர். பிற்பகல் 1.15 மணிக்கு பொங்கல் நைவேத்தியம் நடைபெறும். இரவில் அம்மன் நகர்வலம் நிறைவடைந்த பின்னர், 14ஆம் தேதி அதிகாலை ஒரு மணிக்கு குருதி தர்ப்பணத்துடன் திருவிழா நிறைவடையும். நிகழாண்டு பொங்கல் விழாவில் 40 லட்சத்துக்கு மேற்பட்ட பெண்கள் பங்கேற்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

பெண்களின் சபரிமலை என்றழைக்கப்படும் கேரள தலைநகர் திருவனந்தபுரத்தில் உள்ள உலகப் பிரசித்தி பெற்ற ஆற்றுக்கால் பகவதி அம்மன் கோயிலில் பெண்களால் நடத்தப்படும் பொங்கல் விழா வருடந்தோறும் வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது. ஆற்றுக்கால் பொங்கல் விழா நேற்று கொண்டாடப்படுவதையொட்டி, கடந்த சில நாள்களுக்கு முன்பிலிருந்தே பொங்கல் வைக்க உகந்த இடத்தைத் தேர்வு செய்ய பக்தர்கள் வரத் தொடங்கியிருந்தனர். ஆற்றுக்கால் பகவதி அம்மன் கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் 10 நாள்கள் திருவிழாவின் இறுதிநாளான நேற்று காலை 10.30 மணியளவில் பொங்கல் வைபவம் தொடங்கியது. முதலில் கோயிலில் அமைக்கப்பட்டிருந்த 'பண்டார அடுப்பு' என்றழைக்கப்படும் பொங்கல் அடுப்பை, பக்தர்களின் சரண கோஷம் முழங்க கோயில் தலைமை அர்ச்சகர் பற்ற வைத்து பொங்கல் விழாவை தொடக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, பக்தர்கள் அனைவரும் பொங்கலிடத் தொடங்கினர்.

# வட நாட்டவர்கள் குறித்து அமைச்சர் துரைமுருகன் பேசிய கருத்தால் சலசலப்பு

**வேலூர், மார்ச் 14-**

தமிழ்நாடு எம்.பி.க்களை நாகரிகமற்றவர்கள் என மத்திய அமைச்சர் பேசியதை கண்டித்து அமைச்சர் துரைமுருகன் பேசிய கருத்துக்கள் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய கல்வி நிதியை மத்திய அரசு வழங்காமல் இருப்பது தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் இடையே கருத்து பரிமாற்றம் கடுமையாக நடைபெற்று வருகிறது.

இது தொடர்பாக பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய தமிழக எம்.பி.க்களை மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் நாகரிகமற்றவர்கள் என்று குறிப்பிட்டு பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியது. பின்னர் அவர் அந்த வார்த்தையை திரும்ப பெறுவதாக கூறினார்.

எனினும் அவரை கண்டித்து தி.மு.க. எம்.பிக்கள் போராட்டம் நடத்தினர்.

இந்த விவகாரம் தொடர்பாக தி.மு.க. சார்பில் நேற்று முன்தினம் (மார்ச் 12) தமிழ்நாடு முழுக்க கண்டன பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்த நிலையில் வேலூரில் தி.மு.க. சார்பில் நடந்த கர்ப்பிணி பெண்களுக்கான சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி தமிழக நீர்பாசனத் துறை அமைச்சர் துரைமுருகன் கலந்து கொண்டார்.

அந்த விழாவில் பேசிய அமைச்சர் துரைமுருகன் , "ஒருத்தனுக்கு ஒருத்தி என்பதுதான் தமிழனின் நாகரிகம். ஆனால் வடநாட்டவன் அப்படியல்ல.

அங்கு 5 பேர் இருந்தாலும், 10 பேர் இருந்தாலும் ஒருத்தியை திருமணம் செய்து கொள்வார்கள். ஒருவன் போய்விட்டால் மற்றொருவன் வருவான். இந்த நாற்றமெடுத்த நாகரிகம்தான் உங்களுடையது என்று பேசியுள்ளார்.

அமைச்சர் துரைமுருகனின் இந்த கருத்துக்கள் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# டெல்லியில் பிரிட்டன் சுற்றுலா பயணி பாலியல் வன்கொடுமை: 2 பேர் கைது

**புதுடெல்லி, மார்ச் 14-**


டெல்லியில் உள்ள தனியார் ஹோட்டலில் பிரிட்டன் சுற்றுலா பயணி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார். இதையடுத்து 2 பேரை போலீசார் கைது செய்தனர்.

டெல்லியின் மஹிபால்பூர் பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பிரிட்டன் சுற்றுலா பயணி ஒருவர் இரண்டு ஆண்களால் கூட்டுப்பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கட்டதாக போலீஸார் தெரிவித்தனர்.

செவ்வாய்க்கிழமை நடந்ததாகக் கூறப்படும் இந்தச் சம்பவம் தொடர்பாக இரண்டு பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இது தொடர்பாக பிரிட்டன் தூதரகத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் போலீஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து போலீஸார் நேற்று கூறுகையில், "பிரிட்டன் பெண் சுற்றுலா பயணி கைலாஷ் என்ற நபருடன் சமூக ஊடகம் வாயிலாக நட்பில் இணைந்துள்ளார். அப்பெண் கோவாவில் இருந்து, கைலாஷைக் காண டெல்லி வந்துள்ளார். பாதிக்கப்பட்ட பெண் ஒன்றரை மாதங்களுக்கு முன்பு கைலாஷுடன் சமூக ஊடகத்தில் நட்பாகி உள்ளார். பின்பு அவர்கள் அடிக்கடி உரையாடியுள்ளனர். கிழக்கு டெல்லியில் வசித்து வரும் கைலாஷ் ஆங்கிலத்தில் பேசத் தடுமாறிய நிலையில், அப்பெண்ணுடன் பேசுவதற்கு மொழி பெயர்ப்பு செயலி ஒன்றினைப் பயன்படுத்தியுள்ளார். அப்பெண் இந்தியா வந்த போது, அவரும் பாலியல் வன்கொடுமை குற்றம்சாட்டப்பட்டுள்ள கைலாஷும் டெல்லியில் சந்திக்க முடிவு செய்துள்ளனர். பிரிட்டன் பெண், கைலாஷை சந்திக்க கோவாவிலிருந்து டெல்லி வந்துள்ளார். அங்கு மஹிபால்பூரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் அறை எடுத்துள்ளார். தன்னை சந்திக்க வந்த கைலாஷ், அவரை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். முன்னதாக அப்பெண், ஹோட்டல் லிப்டில் ஹோட்டலின் ஹவுஸ் கீப்பிங் பணியாளர் ஒருவர் தன்னை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார். என்று தெரிவித்தனர். இந்தச் சம்பவங்கள் குறித்து அறிய போலீஸார் ஹோட்டலின் சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்து வருகின்றனர்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



இந்தித் திணிப்பைக் கைவிட்டு, தமிழ், ஆங்கிலம் மற்றும் அனைத்து மாநில மொழிகளிலும் வாடிக்கையாளர் சேவை வழங்கப்படுவதை மத்திய அரசின் எண்ணெய் நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும். அனைத்து மாநில மொழிகளிலும் வாடிக்கையாளர் சேவையை எரிவாயு நிறுவனங்கள் வழங்க வேண்டும்.

- அன்புமணி



வினாத்தாள் கசிவால் நேர்மையாக படிக்கும் மாணவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு நிச்சயமற்ற தன்மை ஏற்பட்டு, மன அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர்களின் கடின உழைப்பின் பலனையும் பறிக்கின்றது. இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

- ராகுல் காந்தி



தமிழ் நாட்டை விட்டு வெளியே செல்ல மாட்டேன் என்று சொல்பவர்களுக்கு மூன்றாவது மொழி தேவை யில்லை. பேரறிஞர் அண்ணா, இந்தியாவிற்கு காலப்போக்கில் ஒரு பொதுவான தொடர்பு மொழி உருவாக வேண்டும் என்று கூறியிருந்தார். அந்த மொழி இந்தி என்று அண்ணா கூற வில்லை. ஆனால் அவர் அதை கோடிட்டு காட்டியிருக்கிறார்.

- டி.டி.வி.தினகரன்



சமூகத்தில் வெறுப்பு பரவுவதால் நாடு பலவீனமடைந்துள்ளது. பா.ஜ.க. சமூகத்தை பலவீனப்படுத்தி பிளவை உருவாக்குகிறது. பா.ஜ.க. நாட்டை பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பலவீனப்படுத்தியுள்ளது. இப்போது அவர்கள் முஸ்லிம் சமூகத்தின் மீது வெறுப்பைப் பரப்புகிறார்கள். எதிர்காலத்தில் அனைவர் மீதும் வெறுப்பை பரப்புவார்கள்.

- அகிலேஷ் யாதவ்

# புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை திறந்து வைத்தார் அமைச்சர்



**ஒட்டன்சத்திரம் மார்ச் 14-**

புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை அமைச்சர் திறந்து வைத்தார்.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொத்தயம், முத்துநாயக்கன்பட்டி ஆகிய ஊராட்சிகளில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்து பேசியதாவது:-

தமிழ்நாடு முதல்வர் இந்தியாவிற்கே வழிகாட்டியாக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். பொது மக்கள் எளிதாக கடனுதவி பெறுவதற்காக தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் தொடங்கப் பட்டுள்ளன. அந்த வகையில் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் மட்டும் புதியதாக 16 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அதன்படி கொத்தயம் மற்றும் முத்துநாயக்கன்பட்டி ஆகிய ஊராட்சிகளில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் பொறுப் பேற்றுள்ள தலைவர், துணைத்தலைவர், நிர்வாக உறுப்பினர்கள் பொதுமக்களுக்கு நல்ல முறையில் சேவை செய்து அவர்கள் கேட்கின்ற கடனுதவிகளை எளிதாக வழங்கி அரசுக்கு நல்ல பெயரை ஏற்படுத்தி தர வேண்டும்.

விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லை பாதுகாப்பாக வைப்பதற்காக ரூ.400 கோடி மதிப்பீட்டில் 3.30 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு நெல்லை பாதுகாப்பாக வைக்க கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. முதலமைச்சர் பொதுமக்களுக்கு தரமான பொருட்களை வழங்க வேண்டுமென்று பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். நெல்லை உடனடியாக சுமார் 700 ஆலைகளில் அறைக்கப்பட்டு மக்களுக்கு தரமான அரிசி வழங்கப்பட்டு வருகிறது. கொத்தயத்தில் நல்லதங்காள் அணை கட்ட வேண்டும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சி காலத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் இடையில் வந்த 10 ஆண்டுகளில் இத்திட்டத்திற்கு போதுமான நிதி வழங்காத காரணத்தினால் இத்திட்டம் தடை பெற்றது.

முதலமைச்சர் பொறுப்பேற்ற பின்பு நல்லதங்காள் அணைக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அணைக்கு தடுப்பு சுவர், வாய்க்கால் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள அனைத்து குளங்களும் தூர் வாரப்படுகிறது. சத்திரப்பட்டி கருங்குளம், அமரப்பூண்டிகுளம் ஆகிய பகுதியில் உள்ள குளங்களை தூர் வாரிய காரணத்தினால் இரண்டு மடங்கு தண்ணீர் சேமிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. கொத்தயம் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுபோன்று விவசாயிகள், பொதுமக்கள் அனைவருக்கும் பல்வேறு திட்டங்களை அறிவித்து ஒரு பொற்கால ஆட்சி நடத்தி வரும் முதல்வருக்கு என்றென்றும் ஆதரவு வழங்க வேண்டும் என பேசினார்.

மேலும், முத்துநாயக்கன்பட்டியில் புதிய நியாய விலைக்கடையை திறந்து வைத்து பொதுமக்களுக்கு குடிமைப்பொருட்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சிகளில், கலைஞரின் கனவு இல்லம் திட்ட பயனாளிகள் 2 பேருக்கு தலா ரூ.1 லட்சம் வீதம் திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கி சார்பில் கடனுதவிகள், 50 நபர்களுக்கு புதிய குடும்ப அட்டைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சிகளில், பழனி வருவாய் கோட்டாட்சியர் கண்ணன், கூட்டுறவு துணைப்பதிவாளர்கள் அன்புக்கரசன், ஜெயசுதா, வட்டாட்சியர்கள் பழனிச்சாமி, பிரசன்னா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபு பாண்டியன் தாகிரா, ஒட்டன்சத்திரம் வேளாண் விளைபொருட்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்க தலைவர் ராஜாமணி, ஒன்றிய செயலாளர் பொன்ராஜ், ஒன்றிய துணைச் செயலாளர் ராஜ்குமார், அரசு ஒப்பந்ததாரர் வேலுச்சாமி உள்ளிட்ட அலுவலர்கள் கொண்டனர்.

## சாயல்குடி அருகே
# கிராம நிர்வாக அலுவலர் சங்க பொதுக்குழு கூட்டம்



**கடலாடி, மார்ச் 14-**

சாயல்குடி அருகே கிராம நிர்வாக அலுவலர்கள் சங்க பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.

சாயல்குடி அருகே உள்ள கீரந்தை கிராமத்தில் தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் சங்க பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர்கள் பதவியேற்பு விழா மற்றும் மாவட்ட பொது குழு என இருபெரும் விழா நடைபெற்றன கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் செந்தில்குமார் தலைமை தாங்கினார்.

மாநில தலைவர் சந்தானகிருஷ்ணன் முன்னிலை வைத்தனர் மாவட்ட செயலாளர் சதீஷ்குமார் அனைவரையும் வரவேற்று பேசினார் மாநில பொதுச் செயலாளர் செல்வன் கலந்து கொண்டு மாவட்ட நிர்வாகிகளுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார் மேலும் கூட்டத்தில் விளக்க உரையும் நிகழ்த்தினர். மாநிலத் தலைவர் வெங்கடேஸ்வரன், தாசில்தார் சேகர், மாநில துணை பொது செயலாளர்கள் ஜானகிராமன் அரங்க வீரபாண்டியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பழைய பென்ஷன் திட்டத்தை கொண்டு வரவும் பெரிய வருவாய் கிராமங்களை பிரிப்பது சம்பந்தமாகவும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பணி பாதுகாப்பு சம்பந்தமாகவும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. வட்டார தலைவர்கள் கடலாடி பூப் பாண்டியன் முதுகுளத்தூர் பழனி பரமக்குடி மணிகண்டன் கமுதி கருப்பண்ணன் ஆகியோர் கூட்டத்தில் கருத்துரைகள் வழங்கினர். முடிவில் மாவட்ட பொருளாளர் சுரேஷ் குமார் நன்றி கூறினார்.

# மதுரையில் நின்று கொண்டிருந்த லாரி மீது பஸ் மோதி ஒருவர் பலி

**மதுரை, மார்ச் 14-**

மதுரையில் தனியார் பஸ் ஒன்று சாலையோரம் நின்று கொண்டிருந்த லாரி மீது மோதியதில் ஒருவர் பலியானார்.

மதுரையில் பயணிகளை ஏற்றிக்கொண்டு தனியார் பஸ் ஒன்று சென்றுகொண்டிருந்தது. இந்த நிலையில் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் சாலையோரம் நின்றுகொண்டிருந்த லாரி மீது மோதியது. இந்த கோர விபத்தில் பஸ்சுக்குள் பயணிகள் சிக்கிக்கொண்டனர். இது குறித்து தகவலறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். விபத்தில் சிக்கிய பயணிகலை ஒருவர் பலி

பேருந்துக்குள் சிக்கிய பயணிகள் கிரேன் உதவியுடன் மீட்பு குழுவினர் மீட்டு வருகின்றனர். இதில் படுகாய மடைந்தவர்கள் ஆம்புலன்ஸ் உதவியுடன் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் இந்த விபத்தில் சிக்கி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். மேலும் மீட்பு பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

# போன்பே பதிவு செய்யப்பட்ட பயனர்களின் எண்ணிக்கை 600 மில்லியனைக் கடந்தது

**சென்னை, மார்ச் 14-**

போன்பே நிறுவனம் இன்று தனது தளத்தில் 600 மில்லியன் (60 கோடி) பதிவு செய்யப்பட்ட பயனர்களைக் கடந்துள்ளதாக அறிவித்துள்ளது. இந்த ஆண்டில், தனது 10 ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதோடு இதன் நிதி சேவைகள் மற்றும் தொழில்நுட்ப தீர்வுகள் மூலம் நூற்றுக்கணக்கான மில்லியன் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்யும் அளவுக்கு வளர்ந்துள்ள நிறுவனத்திற்கு இது ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லைக் குறிக்கிறது.

இது குறித்து ஃபோன்பே நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி சமீர் நிகம் கூறுகையில், 60 கோடி பதிவுசெய்யப்பட்ட பயனர்களை அடைவது என்பது ஃபோன்பேவில் உள்ள எங்கள் அனைவருக்கும் ஒரு பெருமையான தருணமாகும். நாங்கள் அடையும் ஒவ்வொரு மைல்கல்லும், உண்மையிலேயே ஒரு உள்ளடக்கிய நிதிச் சூழலை உருவாக்குவதற்கான எங்களுடைய தொலைநோக்கு பார்வையை நனவாக்க ஒரு படி அருகில் செல்ல உதவுகிறது. எங்கள் பயனர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், இந்தியாவின் டிஜிட்டல் மாற்றத்தை இயக்க உதவுவதற்கும் நாங்கள் தொடர்ந்து உள்நாட்டுத் தீர்வுகளை உருவாக்குவோம் என்று கூறினார்.

# புதிய நியோ 10ஆர் ஸ்மார்ட்போன் ஐக்யூஓஓ அறிமுகம்

**சென்னை, மார்ச் 14-**

உயர் செயல்திறன் கொண்ட ஸ்மார்ட்போன் பிராண்டான ஐக்யூஓஓ, அதன் புதிய சக்திவாய்ந்த ஐக்யூஓஓ நியோ 10ஆர் ஸ்மார்ட்போனை அறிமுகம் செய்துள்ளது.அதிநவீன தொழில்நுட்பத்தில், கல்லூரி மாணவர்கள், தொழில்நுட்ப ஆர்வலர்கள் மற்றும் கேமிங் ஆர்வலர்களுக்கு ஏற்ற வகையில் இந்த ஸ்மார்ட்போன் வடிவமைக்கப்பட்டு உள்ளது. ஸ்னாப்டிராகன் 8எஸ் ஜெனரேஷன் 3 ஆல் இயக்கப்படும் இந்த ஸ்மார்ட்போன், 1.7 மில்லியனுக்கும் அதிகமான ஏஎன் டியூ டியூ ஸ்கோருடன் முதன்மை நிலை செயல்திறனை வழங்குகிறது. மிகவும் மென்மையான நிலையான 90எப்பிஎஸ், கேமிங்கிற்கான 144Hz புதுப்பிப்பு வீதம் மற்றும் இந்த விலைப் பிரிவின் மிக மெல்லிய 6400எம்ஏஎச் பேட்டரி உள்ளிட்ட அதிநவீன அம்சங்களைக் கொண்டுள்ளது.

அறிமுக சலுகையாக 8ஜிபி ரேம் மற்றும் 128ஜிபி மெமரி கார்டுடன் ரூ.26,999க்கு பதிலாக ரூ.24,999-க்கும், 8ஜிபி மற்றும் 256ஜிபி உடன் ரூ.28,999க்கு பதிலாக ரூ.26,999-க்கும், 12ஜிபி மற்றும் 256ஜிபி உடன் ரூ.39,999க்கு பதிலாக ரூ.28,999க்கும் ரேஜிங் ப்ளூ மற்றும் மூன்நைட் டைட்டானியம் ஆகிய இரு வண்ணங்களில் கிடைக்கிறது.இதன் விற்பனை வரும் 19-ந் தேதி அன்று பகல் 12 மணிக்கு துவங்க உள்ள நிலையில் அமேசான்.இன் மற்றும் ஐக்யூஓஓ ஆன்லைன் ஸ்டோரில் இதற்கான முன் பதிவு துவங்கி உள்ளது.ஐக்யூஓஓ நியோ 10ஆர் ஸ்மார்ட்போனை வாங்கும் வாடிக்கையாளர்கள் பின்வரும் சலுகைகளைப் பெறலாம்.முன்பதிவு செய்யும் போது, வாடிக்கையாளர்கள் 12 மாத நீட்டிக்கப்பட்ட உத்தரவாதத்தையும், டெலிவரி செய்யப்பட்டவுடன் உடனடி டிவைஸ் செட்டப்பை வெறும் 99 ரூபாய்க்கும் பெறலாம். மேலும் எஸ்பிஐ, ஐசிஐசிஐ மற்றும் எச்டிஎப்சி வங்கி கார்டுகளுக்கு 2 ஆயிரம் ரூபாய் உடனடி தள்ளுபடி அல்லது அனைத்து பழைய ஸ்மார்ட்போன்களுக்கு எக்சேஞ்ச் போனசாக ரூ.2 ஆயிரம் வழங்கப்படுகிறது. வாடிக்கையாளர்களுக்கு 6 மாத காலத்திற்கு வட்டியில்லா தவணை முறை வசதியும் உள்ளது.

# 2026 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிக்கும்
## அமைச்சர் ராஜா கண்ணப்பன் பேச்சு



**முதுகுளத்தூர், மார்ச் 14-**

2026 சட்டமன்றத் தேர்தலில் அனைத்து பகுதிகளிலும் தி.மு.க. வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் என முதுகுளத்தூரில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் ராஜகண்ணப்பன் பேசினார்.

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் பஸ் நிலையம் அருகே மும்மொழி கொள்கை எதிர்ப்பு மற்றும் ஆர்ப்பாட்டத்திற்கு தி.மு.க. மாவட்ட செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் தலைமை தாங்கினார். நகர செயலாளர் ஷாஜகான் அனைவரையும் வரவேற்று பேசினார். பால்வளத்துறை துறை அமைச்சர் ராஜ கண்ணப்பன் கலந்து கொண்டு பேசியதாவது:-

ஜூன் மாதம் இறுதிக்குள் அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் பஸ் வசதி இல்லாத 81 கிராமங்களுக்கு பஸ் வசதி செய்து கொடுக்கபட்டுள்ளன முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் அனைத்து தலைவர்களுக்கும் சிலை வைக்கப்படும். ஏர்வாடி ஊராட்சி பேரூராட்சியா தரம் உயர்த்தப்பட்டுள்ளன. பி.ஜே.பி. கட்சியினர். கையெழுத்தினை கட்காயப்படுத்து கின்றனர். தமிழர்கள் 5000 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பை கண்டுபித்துள்ளனர். ஜூன் மாதம் இறுதிக்குள் அனைத்து வீடுகளுக்கும் குடிதண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.



**திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் அ.தி.மு.க. கிழக்கு ஒன்றிய செயலாளர் எம்.ஏ.முருகன் தலைமையில் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட ஏ.வெள்ளோடு, அடியனூத்து, தோட்டனூத்து, சிறுமலை, ஊராட்சிகளின் பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் கூட்டம் மாவட்ட தலைமை கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. உடன் ஒன்றிய பொருளாளர் மகாராஜன், துணை செயலாளர் நாகராஜ், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் நெப்போலியன், மாவட்ட பிரதிநிதி முருகராஜ் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.**



**விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டத்தில் அமைந்துள்ள கோபாலபுரத்தில் கிராம மக்களுடன் பங்கேற்ற கிராமப்புற மதிப்பீட்டை, நம்மாழ்வார் வேளாண்மை தொழில்நுட்ப கல்லூரி மாணவிகள் ஊரக வேளாண் அனுபவ பயிற்சியினை முதன்மையாகக் கொண்டு செய்தனர். கிராமப்புற மதிப்பீட்டில் உள்ளூர் பிரச்சினைகள் மற்றும் முதன்மையானவற்றைப் புரிந்து கொள்ள காலக்கோடு, டிரான்செக்ட் நடை, வென் வரைபடம், பிரச்சினை மரம் போன்ற நுட்பங்களைப் பயன்படுத்தி மேலும் தகவலறிந்த வளர்ச்சித் திட்டமிடலை செயல்படுத்தினர்.**

# நிலக்கோட்டையில் தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை சார்பாக மல்லிகையில் கவ்வாத்து செய்யும் முறை பயிற்சி

**வத்தலகுண்டு, மார்ச் 14-**



நிலக்கோட்டையில் தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை சார்பாக மல்லிகையில் கவ்வாத்து செய்யும் முறை பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டாரம், கொக்குப்பட்டி கிராமத்தில் தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை சார்பாக மல்லிகையில் கவ்வாத்து செய்யும் முறை பற்றி விவசாயிகளுக்கான கண்டுணர்வு பயிற்சி நடைபெற்றது. இதில் நிலக்கோட்டை தோட்டக்கலை உதவி இயக்குநர் இரா.வெ. நம்பிஷோபனா மற்றும் உதவி தோட்டக்கலை அலுவலர்கள் தலைமையேற்று, பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து மலரியல் மற்றும் நில எழிலூட்டும் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் ராஜதுரை சிறப்புரை ஆற்றி விவசாயிகளுக்கான பயிற்சியினை தொடங்கி வைத்தனர்.

மேலும் அக்கல்லூரியின் ஊரக தோட்டக்கலை பணி அனுபவ திட்டத்தின் கீழ் நிலக்கோட்டை வட்டாரத்தில் திறனாய்வு கள பயிற்சி மேற்கொண்டு வரும் மாணவிகளும் இதில்கலந்து கொண்டுமல்லிகையில் கவ்வாத்து செய்முறை பயிற்சியை மேற்கொண்டனர். விவசாயிகள் அனைவரும் ஆர்வமுடனும் ஈடுபாட்டுடனும் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர்.



**மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் மாநில அளவில் நடைபெற்ற இலக்கிய மன்றம் போட்டிகளில் வெற்றி பெற்று மாநில விருது பெற்ற வெள்ளி வீதியார் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் மு.வே.சாருலதா, ச.அபிதா, ச.துவாரகா ஆகியோர் மேயர் இந்திராணி பொன்வசந்த் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். அருகில் பள்ளி ஆசிரியர்கள் அழகேஸ்வரி, வாசமதி ராணி ஆகியோர் உடன் உள்ளனர்.**

## நிலக்கோட்டை அருகே
# கலெக்டர் தலைமையில் எத்திலோடு ஊராட்சியில் மக்கள் தொடர்பு முகாம்



**வத்தலகுண்டு, மார்ச் 14-**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், எத்திலோடு ஊராட்சியில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் மாவட்ட கலெக்டர் சரவணன் தலைமையில் நடைபெற்றது. பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு, 532 பயனாளிகளுக்கு ரூ.2.41 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். முகாமில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, சுகாதாரத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியை மாவட்ட கலெக்டர் பார்வையிட்டு, வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித் தொகை உட்பட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்கள் அளித்த மனுக்களை பெற்றுக்கொண்டார்.

முகாமில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் இலவச வீட்டுமனைப் பட்டா 26 பயனாளிகளுக்கு, சமூக பாதுகாப்புத் திட்டம் சார்பில் 44 பயனாளிகளுக்கு ரூ.6.35 இலட்சம் மதிப்பீட்டிலும், வட்டார வளர்ச்சித்துறை சார்பில் 130 பயனாளிகளுக்கு ரூ.1.85 கோடி மதிப்பீட்டிலும், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 12 பயனாளிகளுக்கும், கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டிலும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.1.19 இலட்சம் மதிப்பீட்டிலும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.33,500 மதிப்பீட்டிலும், ஆதிதிராவிடர் நலத் துறை சார்பில் 15 பயனாளிகளுக்கும், வேளாண்மைத் துறை சார்பில் 100 பயனாளிகளுக்கு ரூ.13.48 இலட்சம் மதிப்பீட்டிலும், தாட்கோ சார்பில் 6 பயனாளிகளுக்கு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டிலும், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் 14 பயனாளிகளுக்கும், சமூக நலத்துறை சார்பில் 7 பயனாளிகளுக்கு ரூ.40,600 மதிப்பீட்டிலும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 23 பயனாளிகளுக்கு ரூ.11.50 இலட்சம் மதிப்பீட்டிலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.4.07 இலட்சம் மதிப்பீட்டிலும், உணவுப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் 140 பயனாளிகளுக்கும், என மொத்தம் 532 பயனாளிகளுக்கு ரூ.2.41 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட கலெக்டர் சரவணன் வழங்கினார்.

இம்முகாமில் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் குருமூர்த்தி, திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் சக்திவேல், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் பாண்டியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் முருகேஸ்வரி, தாட்கோ மேலாளர் முத்துச் செல்வி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் பூங்கொடி, மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் கமலக்கண்ணன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் காயத்ரி, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் செல்வம், நிலக்கோட்டை தாசில்தார் விஜயலட்சுமி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



மதுரை சக்கிமங்கலம் கிராமம் தேவி ஸ்ரீ கருமாரியம்மன் ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

# பட்ஜெட்டில் இலச்சினை மாற்றம் ஏன்?: தமிழ்நாடு அரசு விளக்கம்

**சென்னை, மார்ச் 14-**

தமிழக பட்ஜெட்டில் ரூபாய் இலச்சினை '₹' என்பதற்கு பதில் 'ரூ' என மாற்றப்பட்டதற்கு தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது.

தமிழ்நாட்டில் 2025-26-ம் ஆண்டுக்கான பட்ஜெட் சட்டசபையில் இன்று தாக்கல் செய்யப்பட உள்ளது. இந்த பட்ஜெட்டை நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்கிறார். தற்போதைய தி.மு.க. ஆட்சியின் கடைசி முழு பட்ஜெட் இது என்பதால், பல்வேறு முக்கிய அறிவிப்புகள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பட்ஜெட் இன்று தாக்கல் செய்யப்பட உள்ள நிலையில், முதன்முறையாக பொருளாதார ஆய்வறிக்கைய முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டார்.

இந்த நிலையில் தேவநாகரி எழுத்தில் உள்ள ரூபாய் குறியீட்டை மாற்றி 'ரூ' என்ற தமிழ் எழுத்துடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் புதிய இலட்சினையை வெளியிட்டார். இதுதொடர்பாக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் வலைதளத்தில், "'எல்லார்க்கும் எல்லாம்' என்கிற வாசகத்துடன் " சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் தமிழ்நாட்டின் பரவலான வளர்ச்சியை உறுதி செய்திட" என குறிப்பிட்டு தமிழ்நாடு அரசின் பட்ஜெட் இலட்சினையை பதிவிட்டிருந்தார்.

மத்திய அரசின் மும்மொழிக் கொள்கை, கல்விக்கு நிதி வழங்காதது உள்ளிட்ட சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில் தமிழ்நாடு பட்ஜெட் இலட்சினையில் தேவநாகரி எழுத்தான '₹' குறியீட்டுக்கு பதிலாக 'ரூ' என மாற்றி தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. 2025-2026-ம் ஆண்டுக்கான தமிழ்நாடு பட்ஜெட்டுக்கான இலட்சினையில் இந்த குறியீடு இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் 15 அலுவல் மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியை முதல்வர் உபயோகித்து உள்ளார் என்றும், இது தாய் மொழி தமிழ் மீதான பற்றை பறைசாற்றும் விதமாக உள்ளது என்றும், இது அரசியல் சாசன சட்டத்திற்கு எதிரானது இல்லை என்றும் தமிழ்நாடு அரசு விளக்கம் அளித்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வித்துறை சார்பில்

# தமிழ்நாடு ஆசிரியர்கள் அறிவியல் மாநாடு

**சென்னை, மார்ச் 14-**

தமிழ்நாடு ஆசிரியர்கள் அறிவியல் மாநாடு 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு நாமக்கல், மதுரை, புதுக்கோட்டை, வேலூர் ஆகிய மாவட்டங்களில் நாளை நடைபெறவுள்ளது.

இது குறித்து பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் ச.கண்ணப்பன் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கை விவரம் வருமாறு:- அரசுப் பள்ளிகளில் கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களை தானாக பரிசோதனை செய்து கற்றலை மேம்படுத்துவதற்காக வானவில் மன்றம்-நடமாடும் அறிவியல் ஆய்வகம் திட்டம் 2022-ல் தொடங்கப்பட்டது. இதையடுத்து வகுப்பறைக் கற்பித்தலில் புதுமையாக செயல்பட வேண்டியதை உணர்ந்து படைப்பாற்றலுடன் செயல்பட்டு வரும் அறிவியல், கணித ஆசிரியர்களுக்கான மாநாடு நடத்த திட்டமிடப்பட்டது.

இந்த மாநாடு பள்ளிகளில் அறிவியல், கணித வகுப்பறைகளில் நடைபெறும் புதிய கற்பித்தல் முறைகளை பயன்பாட்டு நோக்கில் ஆய்வு செய்து தொகுப்பு கட்டுரைகளை பகிரும் மேடையாக இருக்கும். அதன்படி மாநிலம் முழுவதும் 643 ஆசிரியர்கள் வரை தங்கள் ஆய்வறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர். இந்த அறிக்கைகளை மண்டல வாரியாக சமர்ப்பிக்கும் வகையில் மேற்கு, தெற்கு, மத்திய மற்றும் வடக்கு மண்டலங்களாக மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு மார்ச் 15-ம் தேதி மாநாடுகள் நடத்தப்படவுள்ளன.

அதன்படி மேற்கு மண்டல மாநாடு நாமக்கல் மாவட்டத்திலும், தெற்கு மண்டல மாநாடு மதுரையிலும், மத்திய மண்டல மாநாடு புதுக்கோட்டையிலும், வடக்கு மண்டல மாநாடு வேலூரிலும் காலை 10 முதல் மாலை 5 மணி வரை நடைபெறும். மாநாட்டில் பங்கேற்கவுள்ள ஆசிரியர்கள் தங்களுக்கு ஒதுக்கப்படும் 5 நிமிடங்களில் ஆய்வறிக்கை குறித்து விளக்கிப் பேச வேண்டும். ஒவ்வொரு மண்டலத்தில் இருந்தும் சிறப்பிடம் பெற்ற 10 கட்டுரைகள் தேர்வாகும்.

மாநில அளவில் சிறப்பிடம் பெறும் 40 கட்டுரைகள், சிறப்புக் குழந்தைகளுக்கான ஆய்வறிக்கைகள் 5 என மொத்தம் 45 ஆய்வறிக்கைகளை சமர்ப்பிக்கும் நிகழ்வு சென்னையில் மார்ச் 22-ம் தேதி நடைபெறும். எனவே, உரிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றி தமிழ்நாடு ஆசிரியர்கள் அறிவியல் மாநாடு சிறப்பாக நடைபெற அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.' இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப உபகரணங்கள் கொள்முதலில் முறைகேடு:

# கோவை பாரதியார் பல்கலை. முன்னாள் துணை வேந்தர் உள்பட 16 பேர் வழக்கு

**கோவை, மார்ச் 14-**

கோவை பாரதியார் பல்கலையில் தொழில்நுட்ப உபகரணங்களில் முறைகேடு நடந்ததாக முன்னாள் துணை வேந்தர் உள்பட 16 பேர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

கோவை பாரதியார் பல்கலை.யில் 2016-ல் 500 கணினிகள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்கள் ஆகியவை ரூ.84.57 லட்சம் மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்டன. ஆனால், தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோரி இவற்றைக் கொள்முதல் செய்ததால் முறைகேடு நடந்ததாக புகார்கள் எழுந்தன. இதுகுறித்து லஞ்ச ஒழிப்பு போலீஸார் விசாரணை நடத்தினர்.

தொடர்ந்து, பல்கலை. தொடர்புடையவர்களிடம் விசாரணை நடத்த சிண்டிகேட் கூட்டத்தில் அனுமதி அளிக்கப்பட்டது. இதையடுத்து போலீஸார் விசாரணை நடத்தி, பாரதியார் பல்கலை. முன்னாள் துணைவேந்தர் கணபதி, முன்னாள் பதிவாளர்கள் வனிதா, மோகன், சரவண செல்வன் மற்றும் ஓய்வுபெற்ற பேராசிரியர்கள், தற்போது பணியில் இருக்கும் பேராசிரியர்கள், நிதிப்பிரிவு அலுவலர்கள் என மொத்தம் 16 பேர் மீது ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# நெல் மூட்டைகளை வைக்க கூடுதல் கிடங்குகளை அரசு கட்ட வேண்டும்

## ஓ.பன்னீர் செல்வம் கோரிக்கை

**சென்னை, மார்ச் 14-**

கொள்முதல் செய்த நெல் மூட்டைகளை பாதுகாப்பாக வைக்க கூடுதல் கிடங்குகளை கட்ட வேண்டும் என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

தமிழ்நாடு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாட்டில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்கள் வாயிலாக நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்படுகின்றன. எதிர்பாராத விதமாக ஆங்காங்கே ஏற்படும் மழை காரணமாக நெல் மூட்டைகள் சேதமடைவது என்பது வாடிக்கையாக நடந்து கொண்டே இருக்கின்றது.

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில் 2021-ம் ஆண்டு ஜூன் மாதம் மதுரை மாவட்டம், தோப்பூர் அருகே ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகள் திறந்தவெளி களத்தில் வைக்கப்பட்டதன் காரணமாக மழையில் நனைந்து சேதமடைந்ததில் தொடங்கி, இன்று வரை தொடர்ச்சியாக நெல் மூட்டைகள் மழையில் நனைந்து சேதமடைவது நடைபெற்றுக் கொண்டே வருகிறது. அந்த வகையில், தற்போது கடலூர் மாவட்டம், புவனகிரியில் அண்மையில் பெய்த மழையால் ஆதிவராகநத்தம் பகுதியில் கட்டப்பட்ட நெல் கொள்முதல் நிலையத்தில் மழைநீர் தேங்கியதால் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட நெல் மூட்டைகள் சேதமடைந்துள்ளன.

இதேபோன்று, நாகப்பட்டினம் மாவட்டம், வாழ்குடி, பில்லாளி, மேல பூதனூர், திருமருகல் போன்ற நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் திறந்தவெளியில் வைக்கப்பட்டிருந்த முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட நெல் மூட்டைகள் மழையில் நனைந்து நாசமாகியுள்ளன. இதே நிலைமை தான் டெல்டா மாவட்டங்கள் முழுவதும் நிலவுகிறது. இனி வருங்காலங்களில் நெல் மூட்டைகள் மழையில் நனையாமல் இருக்கத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவும், கூடுதலாகக் கிடங்குகள் கட்டவும் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதல்வருக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# முதல்முறை தமிழகத்தில் பொருளாதார ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது ஏன்..?

**சென்னை, மார்ச் 14-**

தமிழக அரசின் நிதி நிலை அறிக்கை பேரவையில் நாளை தாக்கல் செய்யப்படவிருக்கும் நிலையில், பொருளாதார ஆய்வறிக்கை நேற்று வெளியிடப்பட்டுள்ளது. பொதுவாக, மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை தாக்கலின்போதுதான் அதற்கு முந்தைய நாள், பொருளாதார ஆய்வறிக்கை வெளியிடப்படும்.

மத்திய அரசின் நிதி நிலை எவ்வாறு உள்ளது என்பதை வெளிப்படுத்தும் வகையில் பொருளாதார ஆய்வறிக்கை அமைந்திருக்கும். ஆனால் தற்போது தமிழக அரசு முதல் முறையாக பொருளாதார ஆய்வறிக்கையை வெளியிட்டிருக்கிறது. இன்று பேரவையில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தலைமைச் செயலகத்தில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் பொருளாதார ஆய்வறிக்கையை நேற்று வெளியிட்டார்.

இதனால், திடீரென, தமிழக அரசு பொருளாதார ஆய்வறிக்கையை வெளியிடக் காரணம் என்ன என்ற கேள்வி எழுந்துள்ளது. இதற்கு காரணங்கள் பல இருக்கலாம் என்றாலும், பொதுவான தகவலாக, தமிழக அரசுக்கு கடன் அதிகரித்திருப்பதாக அண்மைக்காலமாக சமூக வலைதளங்களிலும், ஊடகங்களிலும் தகவல்கள் வெளியாகி வருகிறது. எதிர்க்கட்சிகளும் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்து வருகிறார்கள்.

இந்தநிலையில், நாட்டிலேயே அதிகக் கடன் வாங்கியிருக்கும் மாநிலமாக தமிழகம் உள்ளது என்று பாராளுமன்றத்திலும் ஒரு சில நாள்களுக்கு முன்பு மத்திய அரசால் தெரிவிக்கப்பட்டது. இதனால், தமிழக அரசு அதிகக் கடன் வாங்குவதாக மக்கள் கருதக்கூடாது என்பதற்காகவும், அந்தக் கடன் தொகை நல்ல முறையில், மாநிலத்தின் வளர்ச்சிக்காகவே செலவிடப்பட்டு, அதனால் மாநிலம் வளர்ச்சியடைந்து, அந்தக் கடன் தொகை விரைவாக திரும்ப செலுத்தப்படும் என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்தவும்தான் இந்த பொருளாதார ஆய்வறிக்கையை தயாரிக்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

அதுபோல, தமிழக அரசு வளர்ச்சிப்பாதையில் தான் உள்ளது, நலத்திட்டங்களை செயல்படுத்தவே கடன் பெறுகிறது என்று இந்த பொராருளாதார ஆய்வறிக்கை மூலம் தெளிவுபடுத்தப்படலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. வரும் 2026ஆம் ஆண்டில் தமிழகப் பேரவைத் தேர்தல் நடைபெற இருப்பதால் முக்கிய அறிவிப்புகள் ஏதாவது வெளியாக வாய்ப்பு இருப்பதாகவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில்தான், தமிழக அரசு, தனது முதல் பொருளாதார ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளது. இதில் தமிழகத்தின் பொருளாதாரப் போக்கு, பொதுநிதி, வறுமை, வேலை வாய்ப்பு மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகள் குறித்த விவரம் இடம்பெற்றுள்ளன.

# பந்தன் மியூச்சுவல் ஃபண்ட் தொழில் இடைவேளைகளை கணக்கிட தி ஈக்வல் கால்குலேட்டரை அறிமுகப்படுத்துகிறது

**சென்னை, மார்ச் 14-**

இந்த மகளிர் தினத்தில், பந்தன் மியூச்சுவல் ஃபண்ட், தி ஈக்வல் கால்குலேட்டரை அறிமுகப்படுத்துவதன் மூலம் நிதித் திட்டத்தை மறுவரையறை செய்கிறது, இது நிஜ வாழ்க்கைப் பயணங்கள்-இடைநிறுத்தங்கள் மற்றும் அனைத்திற்கும் இடமளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஆன்லைன் கருவியாகும். தடையற்ற வருவாயை அனுமானிக்கும் பாரம்பரிய முதலீட்டு கால்குலேட்டர்களைப் போலல்லாமல், தி ஈக்வல் கால்குலேட்டர், தொழில் இடைவேளைகள் ஒரு யதார்த்தம் என்பதை அங்கீகரிக்கிறது.குறிப்பாக குடும்பம், கல்வி அல்லது தனிப்பட்ட வளர்ச்சிக்காக விலகிச் செல்லும் பெண்களுக்கு. இந்த தனித்துவமான நிதி கருவி, ஓய்வு எடுப்பது என்பது பின்தங்குவதைக் குறிக்காது என்பதை உறுதி செய்கிறது.

தொழில் இடைவெளிகளை காரணியாக்குவதன் மூலம், பந்தன் மியூச்சுவல் ஃபண்டின் ஈக்வல் கால்குலேட்டர் தனிநபர்கள் தங்கள் நிதி எதிர்காலத்தை நம்பிக்கையுடன் திட்டமிட உதவுகிறது, நீண்ட கால செல்வத்தை உருவாக்குவதற்கு மிகவும் துல்லியமான பாதையை வழங்குகிறது. தி ஈக்வல் கால்குலேட்டர்' என்ற பெயர் நிதித் திட்டமிடலில் நியாயத்திற்கான உறுதிப்பாட்டை உள்ளடக்கியது. ஒவ்வொரு திட்டமும் உண்மையான திறனை பிரதிபலிக்கும் வகையில் துல்லியமாக சமநிலைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இது குறிக்கிறது - தொழில் இடைவேளைகள் ஏற்படும்போது கூட.உங்கள் நிதி எதிர்காலத்தை பொறுப்பேற்க, தி ஈக்வல் கால்குலேட்டரை http://equalcalculator.in இல் அணுகலாம்.பந்தன் மியூச்சுவல் ஃபண்டில், வாழ்க்கையின் இடைநிறுத்தங்களால் நிதி சுதந்திரம் பாதிக்கப்படக்கூடாது என்று நாங்கள் நம்புகிறோம் என்று பந்தன் ஏஎம்சியின் தலைமை நிர்வாக அதிகாரி விஷால் கபூர் கூறினார்.

# தஞ்சாவூர் திருபுவனம் பகுதியில் ஆக்கிரமிப்புகளை அகற்றிய பின்னர் சாலை அமைக்க கோரிய வழக்கு

**தஞ்சாவூர், மார்ச் 14-**

தஞ்சாவூர் திருபுவனம் பகுதியில் சாலையை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கு நோட்டீஸ் வழங்கி ஆக்கிரமிப்புகளை 8 வாரத்தில் அகற்ற மெட்ராஸ் உயர் நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவு.

தஞ்சை திருபுவனத்தை சேர்ந்த வழக்கறிஞர் கோகுல் மெட்ராஸ் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனுவினைத் தாக்கல் செய்திருந்தார்.

அதில், "தஞ்சாவூர் திருபுவனம் பகுதியில் பிரசித்தி பெற்ற ஹம்பஹரேஸ்வரர் கோவில் உள்ளது. இந்நிலையில் கோவிலை சுற்றியுள்ள சன்னதி தெருவில் மழைநீர் வடிகால் அமைக்க 1கோடியே 43லட்ச ரூபாய் ஒதுக்கீடுb செய்யப்பட்டு டெண்டர் விடப்பட்டுள்ளது. ஆனால் பணிகள் மேற்கொள்ள இருக்கும் சன்னதி தெருவில் ஏராளமான தனிநபர் ஆக்கிரமிப்புகள் உள்ளது. இதனை அகற்றுவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் பணிகள் மேற்கொண்டால் மழைநீர் வடிகால் அமைப்பது வீணாகும். இது சம்மந்தமாக நகராட்சி நிர்வாகத்திற்கு ஆதாரத்துடன் மனு அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஆக்கிரமிப்புகளை அகற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சாலைகளில் உள்ள ஆக்கிரமப்புகளை அகற்றி முறையாக பணிகளை மேற்கொள்ளாவிட்டால் அரசுக்கு நஷ்டம் ஏற்படுவதோடு, டெண்டர் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்த நிறுவனமே பயனடையும்,

# ஓய்வு பெற்ற காவல் அதிகாரி பொன் மாணிக்கவேல் வழக்கு

**மதுரை, மார்ச் 14-**

பொன்மாணிக்கவேல் மீதான வழக்கு விசாரணைக்கு இடைக்கால தடை விதித்து உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு. ஓய்வு பெற்ற காவல் அதிகாரி பொன் மாணிக்கவேல் தாக்கல் செய்த மனு. ஓய்வு பெற்ற டி.எஸ்.பி காதர் பாட்ஷா சென்னை உயர் நீதிமன்றத்தில், "பொன் மாணிக்கவேல் மீது சிபிசிஐடி வழக்குப்பதிவு செய்து விசாரிக்க உத்தரவிட வேண்டும்" என கோரிக்கை வைத்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி, "என் மீதான புகார் மீது சிபிஐ விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யவேண்டும் என உத்தரவிட்டனர். மேலும் DIG அந்தஸ்துக்கு குறையாத அதிகாரி ஒருவர் தலைமையில் விசாரணை நடத்தி அறிக்கை அளிக்க வேண்டும் என உத்தரவிட்டது.

இதனையடுத்து சிபிஐ விசாரணையை நடத்தி அதனடிப்படையில் வழக்குப் பதிவும் செய்தது. மேலும் மதுரை மாவட்ட கூடுதல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முதற்கட்ட விசாரணை அறிக்கையின் நகலை வழங்கக் கோரி கீழமை நீதிமன்றத்தில் மனு செய்தேன்.

FIRஐ தவிர பிற ஆவணங்களை தர இயலாது எனக்கூறி மனுவை திருப்பி அனுப்பி விட்டனர். ஆகவே, என் மீதான வழக்கை ரத்து செய்து உத்தரவிட வேண்டும்" என கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, புகழேந்தி, " FIR போதிய விவரங்கள் இன்றி மேலோட்டமாக பதியப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்ட நபரின் பேச்சைக் கேட்டு, இவ்வாறு வழக்குப் பதிவு செய்தால், வருங்காலங்களில் குற்றம் சாட்டப்படும் நபர்கள், எந்த விசாரணை அதிகாரி மீது வேண்டுமானாலும் புகார் கொடுத்து, இவ்வாறு வழக்குப் பதிவு செய்யலாமா? இது அமைப்பையே சீர்குலைக்காதா? என கேள்வி எழுப்பினார். இவ்வாறிருந்தால்க் அதிகாரிகள் எவ்வாறு நேர்மையாக, சுதந்திரமாக பணியாற்ற முன்வருவர்? பொன் மாணிக்கவேலின் முன் ஜாமின் மனுவை ரத்து செய்யக்கோரி, சிபிஐ தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. க் பொன் மாணிக்கவேலை காவலில் எடுத்து விசாரிக்க வேண்டிய அவசியம் உள்ளதா? முறையாக பணியாற்றும் அலுவலர்களை பாதுகாக்க வேண்டும். முறையான விவரங்கள் இன்றி பதிவு செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு உகந்தது அல்ல. ஆகவே, பொன்மாணிக்கவேல் மீதான வழக்கு விசாரணைக்கு இடைக்கால தடை விதிக்கப்படுகிறது. மறுஉத்தரவு பிறப்பிக்கப்படும் வரை வழக்கில் குற்றப் பத்திரிக்கையைத் தாக்கல் செய்யக்கூடாது. பொன் மாணிக்கவேல் சிலை கடத்தல் தடுப்பு பிரிவின் அலுவலராக பொறுப்பேற்பதற்கு முன்பும், பின்பும் எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன? என்பது தொடர்பான விபரங்களை அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும். அதோடு, சிபிஐ தரப்பில் கூடுதல் விவரங்களை தாக்கல் செய்ய வேண்டுமென உத்தரவிட்டு வழக்கை மார்ச் 17ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

# சத்துணவு ஊழியர்களின் தணிக்கை தொகை ரூ.257 கோடி தள்ளுபடி: தமிழக அரசு உத்தரவு

**சென்னை, மார்ச் 14-**

சத்துணவு மைய ஊழியர்களிடம் இருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டிய ரூ.257.83 கோடிக்கான தணிக்கைகளை முழுமையாகத் தள்ளுபடி செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

அரசுத் துறைகளின் செயல்பாடுகள் அனைத்தும் தணிக்கைத் துறையால் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்படும். மற்ற அனைத்துத் துறைகளிலும் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், சத்துணவு மையங்களில் மட்டும் 32 ஆண்டுகளாகத் தணிக்கை மேற்கொள்ளப்படாமல் இருந்தது. இதற்கு போதிய ஆவணங்கள் இல்லாததே காரணமாகும்.

இதையடுத்து, அவற்றை ரத்து செய்வதற்கான உத்தரவை சமூக நலத் துறைச் செயலர் ஜெயஸ்ரீ முரளிதரன் பிறப்பித்துள்ளார். அவரது உத்தரவு விவரம்:

2005-ஆம் ஆண்டுக்கு முன்பு, சத்துணவு அமைப்பாளர் பணி என்பது பகுதி நேரப் பணியாக இருந்தது. இதனால், அவர்கள் பணிபுரிந்த மையத்தில் ஆவணங்களைப் பராமரிக்கத் தவறிவிட்டனர். சிலர் பணியில் இருந்து எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் விலகிச் சென்றனர். இதனால், தணிக்கைக்கு ஆவணங்கள் கிடைக்காத நிலை உள்ளது. இதையடுத்து, 32 ஆண்டுகளாக நிலுவையில் உள்ள தணிக்கைத் தடைகளை தள்ளுபடி செய்ய எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்று தலைமைத் தணிக்கை இயக்குநரிடம் இருந்து தடையில்லாச் சான்று பெறப்பட்டுள்ளது. இதனால், அனைத்து மாவட்டங்களிலும் இயங்கும் சத்துணவு மையங்களில் கடந்த 32 ஆண்டுகள் வரை எழுப்பப்பட்டு, நிலுவையில் உள்ள தணிக்கைத் தடைகளுக்கு முழுமையாக விலக்களித்து தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

# மதுரையில் பொது இடங்களில் குப்பை கொட்டினால் இனி ரூ.1 லட்சம் அபராதம்

**மதுரை, மார்ச் 14-**

மதுரையில் பொது இடங்களில் குப்பை கொட்டினால் ரூ.1 லட்சம் அபராதம் விதிக்கப்படும் என்று மாநகராட்சி அறிவித் துள்ளது.

மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட மாட்டுத்தாவணி பஸ் நிலையம், உலகனேரி, ஐகோர்ட்டு மதுரைக் கிளை, உத்தங்குடி, பாண்டி கோவில் ஆகிய பகுதிகளில் உள்ள காலியிடங்கள், சாலை ஓரங்கள், நீர்நிலைகள், திறந்த வெளி கால்வாய்களில் குப்பை கொட்டினால் ரூ.1 லட்சம் அபராதம் விதிக்கப்படும் என்று மதுரை மாநகராட்சி அறிவித்துள்ளது. மேலும் எச்சரிக்கை அறிவிப்பு விடுத்த 24 மணி நேரத்திற்குள் குப்பைகளை அகற்றாவிட்டால் அபராதம் மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுநீரக சோதனை முயற்சியை 26 நகரங்களில் நடத்திய நெஃப்ரோபிளஸ்

**சென்னை, மார்ச் 14-**

ஆசியாவின் மிகப்பெரிய டயாலிசிஸ் பராமரிப்பு வலையமைப்பானநெஃப்ரோபிளஸ், 'மார்ச் 6 முதல் 11, 2025 வரையிலான காலகட்டத்தில் 10,501 பதிவுகளுடன் ஒரே வாரத்தில் அதிகப்படியான மக்கள் சிறுநீரக சுகாதார பரிசோதனைக்கு ஆன்லைனில் பதிவு செய்ததற்கான கின்னஸ் உலக சாதனைகள் பட்டத்தை வென்று ஒரு மகத்தான மைல்கல்லை எட்டியுள்ளது.

'உங்கள் சிறுநீரகங்கள் நலமா? விரைவிலேயே கண்டறியுங்கள் மற்றும் சிறுநீரக ஆரோக்கியத்தை பாதுகாத்திடுங்கள்' என்ற முழக்கத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இலவச சிறுநீரக முகாம்கள், ஆயிரக்கணக்கான மக்களிடமிருந்து ஏகோபித்த வரவேற்பை பெற்றது. இந்த முன்னெடுப்பானது நீரிழிவு மற்றும் ரத்தகொதிப்பு கொண்டவர்கள் உட்பட குறிப்பாக அதிக-அபாயம் கொண்ட தனிநபர்களை இலக்கு வைத்தது மற்றும் சிறுநீரக நோயை தடுப்பதில் அதை தொடக்கத்திலேயே கண்டறிவதன் முக்கியத்துவத்தை பற்றி அழுத்தம் தந்தது. இப்பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நகரங்கள் யாவையெனில் மற்ற நகரங்களுக்கிடையே பெங்களூரு, ஜெய்ப்பூர், புனே, ஹைதராபாத், லக்னோ மற்றும் ராஞ்சி ஆகியன.

நெஃப் ரோ பி ளஸ்-ன் குழு CEO மற்றும் நிறுவனரான விக்ரம் உப்பலா கூறுகையில், "இந்த குறிப்பிடத்தக்க சாதனையானது ஒரு நாட்டின் பல்வேறு பகுதிகளில் 12% முதல் 21% வரை CKD நிலவும் ஒரு நிலைமையில் சிறுநீரக ஆரோக்கியத்தை பற்றி விழிப்புணர்வை தட்டியெழுப்பும் எங்கள் அசையாத அர்ப்பணிப்பை கோடிட்டு காட்டுகிறது. முற்றிய நிலை வரை பலரில் இந்நோய் கண்டறியப்படாமல் உள்ளது மற்றும் இது பெரியளவு, தடுக்கக்கூடிய சுகாதார தலையீடுகளின் தேவையை கோடிட்டு காட்டுகிறது. " என்றார்.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran Printers at 9, Dindigul Main Road, vilangudi, Madurai - 625 018.
Phone: 0452- 2668165, 0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேலூர், (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்)
அ.தி.மு.எண்: 1186/2024/அ.3
V. ராஜா, S/o. வாழமலை,
அம்மன்பட்டி,
குறிச்சிப்பட்டி கிராமம்,
மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்.
....... மனுதாரர்
//எதிரிடை //
உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்
மேலூர்
....... எதிர்மனுதாரர்
மனுதார் V.ராஜா என்பவரின் மகள் ஜெகதீஸ்வரி 29.09.1990-ம் தேதியில் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், குறிச்சிப்பட்டி கிராமம், அம்மன்பட்டி வீட்டில் பிறந்ததை அவரது பிறப்பை குறிச்சிப்பட்டி கிராம பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் ( இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.
V.ராஜா
மனுதாரர்

மாண்பமை சார்பு நீதிமன்றம்,
தாராபுரம்
இ.ம.எண்: 28 / 2024
அ.வ.எண்: 120 / 2006
வெங்கடேஸ்வரராஜா
.....மனுதாரர் / கோரிக்கையாளர்
/எதிராக/
எம்.ஆர்.முருகன்,
த/பெ.லேட்.ராமசாமி,
104, ஆண்டவர் பூங்கா ரோடு,
பழனி டவுன், பழனி வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.
.......2-ம் எதிர்மனுதாரர் /
2-ம் பிரதிவாதி
அறிவிப்பு
தாராபுரம் மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள தங்கள் வழக்கின் அ.வ.எண்: 120 / 2006, இ.ம.எண் : 28 / 2024 வருகின்ற 28.04.2025-ந் தேதி வாய்தா போடப்பட்டு உள்ளது. இதைப் பொறுத்து உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் சமூகம் நீதிமன்றத்தில் நாளது தேதியில் காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபணை தெரிவிக்க வேண்டியது. அல்லாத பட்சத்தில் ஆட்சேபணை ஏதும் இல்லையென உத்தரவிடப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கின்றோம்.
மனுதாரர் வழக்கறிஞர்கள்,
எஸ்.மகுடீஸ்வரன், பி.காம்.,பி.எல்.,
எஸ்.சுரேஷ்குமார், பி.ஏ.,எல்.எல்.பி.,
எண்.9 திருவள்ளுவர்
குறுக்குச்சாலை,
அண்ணா நகர், பழனி
Cell: 9865020576

மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்.
உசிலம்பட்டி.
ந.க.எண்.4613/2024/ஆ3
சேவுகபெருமாள்,
த/பெ.லேட்.பெரியசாமி
9,5-வது மெயின்ரோடு
கோபாலபுரம், பட்டாபிராம்
ஆவடி வட்டம், பின்:600072
திருவள்ளூர் மாவட்டம்.
------- மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.
----- எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரராகிய நான், எனது தாயார் சின்னஊர்காலி, க/பெ.லேட்.பெரியசாமி என்பவர் கடந்த 02.10.2002-ம் தேதி பேரையூர் வட்டம்,மள்ளப்புரம் கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், உசிலம்பட்டி முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.
மனுதாரர்
சேவுகபெருமாள்
பட்டாபிராம், ஆவடி வட்டம்.

ந.க.எண்.695/2025
வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், சிவகங்கை
அறிவிப்பு
சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டம், 193 நூத்தன்கண்மாய் கிராமம், காளக்கண்மாய் பஞ்சயாத்து என்ற முகவரியில் வசிக்கும் வேலுச்சாமி என்பவரின் தந்தை கருப்பையா த/பெ.பூமிநாதன் என்பவர் கடந்த 03.10.1981ந் தேதிஷை முகவரியில் இறந்துவிட்டார். மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக்கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபணையை எழுத்துபூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
கல்யாணி
மனுதார்

## இன்ஸ்டாவில் சி.எஸ்.கே அணியை
# பின்தொடர்பவர்கள் எண்ணிக்கை 17 மில்லியனை தாண்டி சாதனை

**சென்னை, மார்ச் 14-**
இன்ஸ்டாவில் சி.எஸ்.கே அணியை பின்தொடர்பவர்கள் எண்ணிக்கை 17 மில்லியனை தாண்டியது.




**சி.எஸ்.கே . அணி...**
சென்னை சூப்பர் கிங்ஸ் அணி அவர்களுடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில் 17 மில்லியன் பின் தொடர்பவர்களை பெற்ற முதல் அணி என்ற சாதனையை படைத்துள்ளது. சென்னைக்கு அடுத்தபடியாக 16.3 மில்லியன் பின் தொடர்பவர்களுடன் ஆர்.சி.பி அணி இரண்டாவது இடத்திலும், 15.4மில்லியன் பின் தொடர்பவர்களுடன் மும்பை இந்தியன்ஸ் அணி மூன்றாவது இடத்திலும் உள்ளது.

**5 ஐ.பி.எல். கோப்பை...**
எம்.எஸ் டோனி என்ற பெயர்தான் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் இன்ஸ்டாகிராமில் அதிக பேர் பின் தொடர்பவதற்கு காரணம் என்றால் மிகையாகாது. இந்திய முழுவதும் சென்னை அணிக்கு ரசிகர்கள் இருப்பதற்கும் அவர்தான் காரணம். இதுவரை 5 ஐ.பி.எல். கோப்பைகளை சென்னை அணி வென்றுள்ளது. இந்நிலையில், 2024 ஐ.பி.எல். தொடரில் சி.எஸ்.கே. கேப்டன் பதவியில் இருந்து தோனி விலகி, ருதுராஜ் கெய்க்வாட் இடம் கேப்டன் பொறுப்பை ஒப்படைத்தார். வரும் ஐ.பி.எல். தொடரில் ருதுராஜ் தலைமையில் சென்னை அணி களமிறங்கவுள்ளது.

**10 மில்லியன்...**
எக்ஸ் பக்கத்தில் 10 மில்லியன் பின்தொடர்பவர்களை கடந்த ஒரே அணி என்ற சாதனையையும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தன்வசம் வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ராஜஸ்தான் அணியில் இணைந்தார் இளம் வீரர் வைபவ் சூரியவன்ஷி

**ஜெய்ப்பூர், மார்ச் 14-**
ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் பயிற்சி முகாமில் மிக இளம் ஐ.பி.எல். வீரர் என்ற பெருமையை பெற்ற வைபவ் சூரியவன்ஷி இணைந்துள்ளார்.




**ஐ.பி.எல். தொடர்...**
ஐ.பி.எல். மெகா ஏலத்தின் போது, வைபவ் சூரியவன்ஷியை ரூ.1.10 கோடிக்கு ராஜஸ்தான் ராயல்ஸ் அணி ஏலம் எடுத்தது. அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது நினைவுகூரத்தக்கது.

**ரூ.1.10 கோடிக்கு ஏலம்...**
ஐ.பி.எல். 2025 தொடர் வருகின்ற மார்ச் 22ஆம் தேதி தொடங்குகிறது. இந்த தொடருக்கான மெகா ஏலம் கடந்தாண்டு இறுதியில் நடைபெற்றது. இந்த ஏலத்தில் ரூ.30 லட்சம் அடிப்படை விலை கொண்ட வைபவ் சூரியவன்ஷியை, ரூ.1.10 கோடிக்கு வாங்கியது ராஜஸ்தான் ராயல்ஸ். ஐ.பி.எல். தொடர் தொடங்கப்பட்ட 2008 ஆம் ஆண்டுக்குப் பிறகு பிறந்து, ஐ.பி.எல். தொடரில் விளையாட தேர்வான முதல் வீரர் என்ற பெருமையை வைபவ் சூர்யவன்ஷி பெற்றார்.


**12 வயதில் சாதனைகள்...**
ரஞ்சி டிராபியில் பிகார் அணிக்காக தனது முதல் தரப் போட்டியில் அறிமுகமானவர் வைபவ் சூரியவன்ஷி. பிகாருக்காக ரஞ்சி டிராபியில் விளையாடிய இரண்டாவது இளைய வயதுடையவர் ஆவார். பிகார் அணிக்காக வினூ மன்கட் டிராபியில் விளையாடி 5 போட்டிகளில் சுமார் 400 ரன்களைக் குவித்து சாதனை படைத்துள்ளார்.

**இளைய இந்தியர்...**
ஆஸ்திரேலியாவுக்கு எதிரான சர்வதேச போட்டியில் சதம் அடித்த இளைய வீரர் என்ற பெருமையை பெற்றவர். 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை, 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான ஆசியக் கோப்பை தொடர்களில் விளையாடியுள்ளார். 1986 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல் தர கிரிக்கெட்டில் அறிமுகமான மிகவும் இளைய இந்தியர் என்ற பெருமையையும் பெற்றவர்.

**வீடியோ வெளியீடு...**
இந்த நிலையில், அணியுடன் இணைந்த வைபவ் சூரிய வன்ஷியை வரவேற்று ராஜஸ்தான் ராயல்ஸ் நிர்வாகம் விடியோவை வெளியிட்டுள்ளது. வருகின்ற மார்ச் 23ஆம் தேதி ராஜஸ்தான் விளையாடவுள்ள முதல் போட்டியில் சன் ரைசர்ஸ் அணிக்கு எதிராக வைபவ் களமிறக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ரோகித் சர்மா ஓய்வு பெறுவதற்கு காரணமே இல்லை: டி வில்லியர்ஸ்

**கேப் டவுன், மார்ச் 14-**
சாம்பியன்ஸ் டிராபியை வென்ற ரோகித் சர்மா ஓய்வு பெறுவதற்கு காரணமே இல்லை என தென்னாப்பிரிக்க வீரர் ஏபி டி வில்லியர்ஸ் கூறியுள்ளார்.



**ரோகித்ஓய்வு...**
டி20 உலகக் கோப்பை இந்திய அணி வென்றவுடன் ரோஹித், கோலி, ஜடேஜா ஓய்வை அறிவித்தார்கள். அதேபோல் சாம்பியன்ஸ் டிராபியை வென்றவுடன் ரோகித்சர்மா ஓய்வு பெறுவாரென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ரோகித் சர்மா இதனை மறுத்துவிட்டார். விராட் கோலியும் எதுவும் அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**ஏன் ஓய்வு பெறவேண்டும்?...**
இந்நிலையில் தெ.ஆ.வீரர் ஏபிடி வில்லியர்ஸ் தனது யூடியூப் சேனலில் கூறியதாவது: மற்ற கேப்டன்களை ஒப்பிடும்போது ரோஹித்தின் வெற்றி சதவிகிதம் 74%ஆக இருக்கிறது. இது மற்றவர்களை மிக அதிகம். ரோகித்இதே போல் சென்றால் எக்காலத்துக்குமான ஒரு நாள் போட்டிகளின் மிகச் சிறந்த கேப்டனாக மாறிவிடுவார். வதந்திகளை ரோஹித்தும் ஓய்வுபெறப்போவதில்லை எனக் கூறியுள்ளார். ரோகித் ஏன் ஓய்வு பெறவேண்டும்? கேப்டனாக மட்டுமில்லை, பேட்டராகவும் ரோகித்சிறப்பாக செயல்படுகிறார். இறுதிப் போட்டியில் 76 ரன்கள் அடித்து சிறப்பான தொடக்கதை அளித்தார்.

**சாதனைகளே பேசும்...**
அழுத்தம் அதிகமாக இருக்கும் போது முதல் ஆளாக முன்னின்று அணியை வழிநடத்தினார். அவர் எந்தவிதமான விமர்சனங்களையும் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. அவரது சாதனைகளே அவருக்காக பேசும். அது மட்டுமில்லை, அவர் தனது ஆட்டத்தையும் மாற்றியுள்ளார். பவர்பிளேவில் அவரது ஸ்டிரைக்-ரேட்டை பாருங்கள். 2022க்குப் பிறகு 115ஆக முன்னேறியுள்ளது. அதுதான் நல்லது, சிறந்ததுக்குமான வித்தியாசம். அது உங்களது சொந்த ஆட்டத்தை மாற்றும், அது நிற்கவே போவதில்லை. எப்போதுமே எதாவது சிறப்பாக செயல்படவும் கற்றுக்கொள்ளவும் இருக்கத்தான் செய்யும் என்றார்.

# ஐ.சி.சி. கோப்பையை நியூசி. வெல்லும்: ரிக்கி பாண்டிங்

**சிட்னி, மார்ச் 14-**
ஆஸி. முன்னாள் கேப்டன் ரிக்கி பாண்டிங் நியூசிலாந்து அணி விரைவில் கோப்பையை வெல்லும் எனக் கூறியுள்ளார்.

**நியூசிலாந்து அணி...**
ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபியின் இறுதிப் போட்டியில் 49ஆவது ஓவர் முடிவில் இந்திய அணி 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் நியூசிலாந்தை வீழ்த்தி வெற்றி பெற்றது. 7-ஆவது முறையாக நியூசிலாந்து ஐ.சி.சி. இறுதிப் போட்டிக்கு முன்னேறியிருந்தது. இந்த 7 போட்டிகளில் 2 முறை மட்டுமே நியூசிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

**திறமையான செயல்பாடு...**
இது குறித்து ஐ.சி.சி. ரிவிவ்யூவில் 3 உலகக் கோப்பைகளை வென்ற ஆஸி. முன்னாள் கேப்டன் ரிக்கி பாண்டிங் கூறியதாவது: சாம்பியன்ஸ் டிராபி - நியூசி.க்கு சிறப்பாகவே அமைந்தது நியூசிலாந்தின் கிரிக்கெட் பயணம் எதுவும் தவறாக செய்யவில்லை. எனக்கு தெரிந்து மற்றுமொரு சிறப்பான ஐ.சி.சி. தொடராகவே நியூசி.க்கு சாம்பியன்ஸ் டிராபியும் அமைந்தது. அந்தத் தொடரை முழுவதும் அவர்கள் திறமையாகவே செயல்பட்டார்கள்.

**நன்றாக விளையாடுகிறது...**
நான் சாம்பியன்ஸ் டிராபி தொடங்குவதற்கு முன்னதாக உங்களிடம் கேட்டிருந்தால் நீங்கள் 4 அணிகளில் நியூசிலாந்தை சேர்த்திருப்பீர்கள். ஏனெனில் அந்த அணி அவ்வளவு நன்றாக விளையாடுகிறது. நான் இந்தமுறை சொந்த மண்ணில் பாகிஸ்தான் வெல்லும் அல்லது தென்னாப்பிரிக்க அணி வெல்லும் என்றே நினைத்தேன். நியூசிலாந்து அங்கு இருக்காதே என்றே நினைத்தேன். ஆனால், நிச்சயமாக அவர்கள் வந்தார்கள்.

**கோப்பையை வெல்லும்...**
விரைவில் ஐ.சி.சி. கோப்பையை நியூசி. வெல்லும் அரையிறுதியில் தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக (362/6) என்ன மாதிரி ஒரு ஆதிக்கமான விளையாட்டை நியூசி. அணியினர் விளையாடினார்கள். அதுமாதிரி ஒருநாள் கிரிக்கெட்டை சிறப்பாக விளையாடவே முடியாது. முதலில் பேட் செய்து 360 ரன்கள் எடுத்தார்கள். சாம்பியன்ஸ் டிராபியில் இதுதான் அதிகபட்ச ரன்கள் என நினைக்கிறேன். இறுதிப் போட்டியில் விளையாடிய நியூசிலாந்து அணியும் நல்ல அணியே. அவர்கள் வெற்றிக்கு மிகவும் தூரமாக ஒன்றுமில்லை. இந்திய அணி 49 அல்லது 50ஆவது ஓவரில் தானே வென்றது. அவர்கள் பெரிதாக தவறிழைக்கவில்லை.

**நல்ல தொடர்...**
இறுதிப் போட்டியில் சில நட்சத்திர வீரர்களைவிட மற்றவர்கள் நன்றாகவே செயல்பட்டார்கள். அதிக விக்கெட்டுகள் எடுத்த மாட் ஹென்றி சரியாக இருந்திருந்தால் விளையாடியிருப்பார். அதனால், அவர்களுக்கு ஒட்டுமொத்தமாக ஒரு நல்ல தொடராகவே அமைந்தது. விரைவில் நியூசி. ஐ.சி.சி. கோப்பையை வெல்லும் என்றார்.

## ஊட்டி, கொடைக்கானலுக்கு செல்லும் சுற்றுலா வாகனங்களுக்கு கட்டுப்பாடுகள்


**சென்னை, மார்ச் 14-**
ஊட்டி, கொடைக்கானலுக்கு எத்தனை சுற்றுலா வாகனங்களை அனுமதிக்கலாம் என்பது குறித்த வழக்கில் சென்னை ஐகோர்ட் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.
இதுதொடர்பாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவில், "ஊட்டிக்கு வார நாட்களில் 6 ஆயிரம் சுற்றுலா வாகனங்களும், வார இறுதி நாட்களில் 8 ஆயிரம் வாகனங்களும் மட்டுமே அனுமதி வழங்கப்படும். கொடைக்கானலுக்கு வார நாட்களில் 4 ஆயிரம் சுற்றுலா வாகனங்களும், வார இறுதி நாட்களில் 6 ஆயிரம் வாகனங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட வேண்டும்.
அரசு பஸ், ரெயில்கள் மூலம் வரும் சுற்றுலாப்பயணிகளுக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை. உள்ளூர் வாகனங்கள், விவசாய பொருட்கள் எடுத்துச் செல்லும் வாகனங்களுக்கும் எந்தக் கட்டுப்பாடும் இல்லை. மலை அடிவாரத்தில் இருந்து நகரங்களுக்கு செல்ல மினி மின்சார பஸ்கள் இயக்குவது குறித்து பரிசீலிக்க வேண்டும்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் கட்டுப்பாடுகளை ஏப்ரல் 1ம் தேதி முதல் அமல்படுத்தி ஏப்ரல் 25ல் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டது. இந்த உத்தரவுகள் ஜூன் மாதம் வரை அமலில் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து இந்த வழக்கு ஏப்ரல் 25ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## பதிலளிக்க எம்.எஸ்.டோனி மறுப்பு



இந்திய அணியின் முன்னாள் கேப்டன் எம்.எஸ். தோனி. இவர் அனைத்து வகை கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். எனினும், இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) கிரிக்கெட் தொடரில் மட்டும் விளையாடி வருகிறார். ஐ.பி.எல். தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடி வரும் எம்.எஸ். டோனிசமீபத்தில் டில்லி விமான நிலையம் வந்திருந்தார்.
அப்போது, அவரிடம் இந்திய அணி சாம்பியன்ஸ் டிராபி வெற்றி பெற்றது குறித்த கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு எம்.எஸ். டோனிஎந்த பதிலும் தெரிவிக்காமல், கையை தேவையில்லை என்பது போல் செய்கை காண்பித்து அங்கிருந்து கடந்து சென்றுள்ளார். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் அதிகம் பகிரப்படுகிறது. இந்திய அணி சாம்பியன்ஸ் டிராபி வெற்றி பெற்றது தொடர்பான கேள்விக்கு எம்.எஸ். டோனிபதில் அளிக்காமல் சென்ற சம்பவம் ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

## விருதை வென்றார் சுப்மன் கில்



ஒவ்வொரு மாதமும் சிறந்த வீரர், வீராங்கனை விருது ஐ.சி.சி. சார்பில் வழங்கப்படுகிறது. இதற்கிடையே, பிப்ரவரி மாதத்திற்கான சிறந்த வீரர், வீராங்கனைக்கான பரிந்துரை செய்யப்பட்ட பட்டியல் வெளியானது. சிறந்த வீரருக்கான விருதுக்கு இந்தியாவின் சுப்மன் கில், ஆஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஸ்மித், நியூசிலாந்தின் கிளென் பிலிப்ஸ் ஆகியோர் பரிந்துரை செய்யப்பட்டு இருந்தனர்.
இந்நிலையில், பிப்ரவரி மாதத்துக்கான சிறந்த வீரர் விருதை இந்தியாவின் சுப்மன் கில் வென்றார். சிறந்த வீரர் விருதை சுப்மன் கில் மூன்றாவது முறையாக வென்றுள்ளார். சாம்பியன்ஸ் டிராபி தொடரில் வங்கதேசம் (101 ரன்), பாகிஸ்தானுக்கு (46) எதிராக விளாசிய இவர், இந்தியா பைனலுக்கு செல்ல கைகொடுத்தார். ஏற்கனவே கடந்த 2023-ம் ஆண்டில் ஜனவரி மற்றும் செப்டம்பர் மாதங்களில் சுப்மன் கில் சிறந்த வீரர் விருதை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.
சிறந்த வீராங்கனைக்கான விருதுக்கு ஆஸ்திரேலியாவின் அலானா கிங் வென்றார்.

## டென்னிஸ்: காலிறுதியில் அல்காரஸ்

முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இண்டியன் வெல்ஸ் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடந்து வருகிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 4-வது சுற்று ஆட்டம் ஒன்றில் கார்லஸ் அல்காரஸ் (ஸ்பெயின்) - டிமிட்ரோவ் (பல்கேரியா) மோதினர்.
இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய அல்காரஸ் 6-1 மற்றும் 6-1 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளார். இவர் காலிறுதியில் பிரான்சிஸ்கோ செருண்டோலோ உடன் மோத உள்ளார்.

## பேட்மிண்டன்: பி.வி.சிந்து தோல்வி

ஆல் இங்கிலாந்து பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டி பர்மிங்காமில் நகரில் நடந்து வருகிறது. இதில் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து முதலாவது சுற்றில் தென் கொரியாவின் கிம் கா உடன் மோதினார்.
இந்த ஆட்டத்தில் முதல் செட்டை கைப்பற்றிய பி.வி.சிந்து அடுத்த 2 செட்டுகளை இழந்து அதிர்ச்சி தோல்வியை தழுவினார். இந்த ஆட்டத்தில் சிந்து 21-19, 13-21 மற்றும் 13-21 என்ற செட் கணக்கில் வீழ்ந்தார்.

## பெனால்டியில் வென்ற ரியல் மாட்ரிட்

சாம்பியன்ஸ் லீக்கில் அத்லெடிகோ மாட்ரிட்டை பெனால்டியில் வென்றது அசத்தியது ரியல் மாட்ரிட் கால்பந்து அணி. ரவுண்ட் ஆப் 16 சுற்றில் அத்லெடிகோ மாட்ரிட்டை அணி வீரர் கனோர் கல்லாகர் முதல் நிமிஷத்திலேயே கோல் அடித்து அசத்தினார். பின்னர் இரு அணிகளும் வலுவான டிபென்ஸுகளால் எந்த கோல்களும் அடிக்கவில்லை.
முதல் சுற்றில் ரியல் மாட்ரிட் 1-0 என வென்றதால் இந்தப் போட்டி சமனில் முடிவடைந்தது. பின்னர் கூடுதல் நேரம் ஒதுக்கியும் முடிவு எட்டப்படாததால் ஆட்டம் பெனால்டிக்கு சென்றது. பெனால்டியில் அசத்திய ரியல் மாட்ரிட் அணி 4-2 என வென்றது. இதன் மூலம் ரியல் மாட்ரிட் அணி காலிறுதிக்கு தகுதி பெற்றது.

## சையத் அபித் அலி மரணம்

இந்திய கிரிக்கெட் அணியின் மூத்த ஆல்ரவுண்டர் சையத் அபித் அலி உடல்நலக் குறைவால் காலமானார். அவருக்கு வயது 83. ஆல்ரவுண்டரான சையத் அபித் அலி பீல்டிங்கிக்கு பெயர் பெற்றவர். இவர் 1967 ஆம் ஆண்டு அடிலெய்டில் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் அறிமுகமானார். அறிமுகப் போட்டியிலேயே 6 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார். அதே தொடரில் சிட்னியில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இரண்டு இன்னிங்ஸ்களில் 78 மற்றும் 81 ரன்கள் விளாசினார்.
1967 ஆம் ஆண்டு முதல் 1974 ஆம் ஆண்டு வரை விளையாடிய சையத் அபித் அலி இந்தியாவுக்காக 29 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். அதில் 1,018 ரன்களும், 47 விக்கெட்டுகளும் வீழ்த்தியுள்ளார். ஹைதராபாத்தைச் சேர்ந்தவரான சையத் அபித் அலியின் மறைவுக்கு இந்திய கிரிக்கெட் வாரியம் மட்டுமின்றி, கிரிக்கெட் வீரர்கள் அனைவரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# தெலுங்கான முதல்வருடன் தி.மு.க தலைவர்கள் சந்திப்பு

**சென்னை, மார்ச் 14-**
சென்னையில் வருகிற மார்ச் 22 ஆம் தேதியன்று தொகுதி மறுவரையறை குறித்த கூட்டு நடவடிக்கை குழு கூட்டம் நடத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இந்த கூட்டத்தில் பங்கேற்க தென் மாநில அரசியல் கட்சிகளின் தலைவர்களை தமிழக அமைச்சர்கள் நேரில் சந்தித்து அழைப்பு விடுத்து வருகின்றனர். டெல்லியில் தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டியை நேரில் சந்தித்த தமிழக அமைச்சர் கே.என். நேரு, திமுக எம்பிக்கள் கனிமொழி, ஆ. ராசா உள்ளிட்டோர், கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுத்தனர்.
இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த ரேவந்த் ரெட்டி, தொகுதி மறுசீரமைப்பை ஏற்க மாட்டோம், முதல்வர் ஸ்டாலினின் அழைப்பை ஏற்கிறேன், கட்சி மேலிட அனுமதி பெற்று கூட்டத்தில் பங்கேற்பேன் எனத் தெரிவித்துள்ளார். முன்னதாக கர்நாடக முதல்வர் சித்தராமையா, துணை முதல்வர் டி.கே. சிவக்குமார், ஒடிஸா முன்னாள் முதல்வர் நவீன் பட்நாயக், ஆந்திரப் பிரதேசத்தின் முன்னாள் முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி ஆகியோரை நேரில் சந்தித்து தமிழக அமைச்சர்கள் அழைப்பு விடுத்தது குறிப்பிடத்தக்கது.

# எச்சில் இலையில் அங்கப்பிரதட்சணம் செய்ய தடை: ஐகோர்ட் கிளை உத்தரவு

**மதுரை, மார்ச் 14-**
கரூர் கோயிலில் பக்தர்கள் உணவருந்திய இலையில் அங்கப்பிரதட்சணம் செய்ய அனுமதி வழங்கி தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து உயர் நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டுள்ளது.
திருவண்ணாமலை கோயிலைச் சேர்ந்த அரங்கநாதன், தமிழக அரசின் தமிழ் வழியில் அர்ச்சகர் பயின்று தற்போது திருவண்ணாமலை கோயிலில் அர்ச்சகராக பணிபுரிந்து வருகிறார். இவர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: கரூர் மாவட்டம், நெரூர் சத்குரு சதாசிவ பிரம்மேந்திரர் சபா தரப்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கவும், அவர்கள் உண்ட இலையில் பக்தர்கள் அங்கப் பிரதட்சணம் செய்யவும் அனுமதிக்க கோரி மதுரை அமர்வில் வழக்கு தொடரப்பட்டது. நீதிமன்றம் அனுமதி வழங்கியதால், கடந்த ஆண்டு மே 18ம் தேதி நடைபெற்ற நிகழ்வில், அவ்வாறு அங்கப் பிரதட்சணமும் செய்யப்பட்டது.
இங்கு 2015-ம் ஆண்டு முதல் பக்தர்கள் உணவருந்திய இலையில் அங்கப் பிரதட்சணம் செய்யும் நிகழ்வுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. அதன் அடிப்படையில் இந்த ஆண்டும் அதிகாரிகள் அனுமதி மறுத்தனர். ஆனால் மனுதாரர் நீதிமன்றத்தை நாடி பழைய உத்தரவுகளை மறைத்து, தங்களுக்கு சாதகமான உத்தரவை பெற்றுள்ளனர். இந்த உத்தரவு பலராலும் தவறாக பயன்படுத்தப்பட வாய்ப்பு உள்ளது. எனவே பக்தர்கள் உணவருந்திய இலையில் அங்கப் பிரதட்சணம் செய்யலாம் என்ற தனி நீதிபதியின் உத்தரவிற்கு தடை விதித்தும், ரத்து செய்தும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார். தனி நீதிபதியின் உத்தரவுக்கு எதிராக கரூர் மாவட்ட கலெக்டரும் மேல்முறையீட்டு மனுத் தாக்கல் செய்திருந்தார்.
இந்த மனுக்களை விசாரித்த நீதிபதிகள் சுரேஷ் குமார், அருள் முருகன் அமர்வு தீர்ப்பை ஒத்திவைத்தது. இந்நிலையில் நீதிபதிகள் நேற்று அளித்த தீர்ப்பு: எச்சில் இலையில் உருளுவதை வழிபாட்டு முறையாக கூறினாலும், அது சுகாதாரத்திற்கும், மனித மாண்புக்கும் உகந்தது அல்ல. ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் இது போன்ற நிகழ்வுகளுக்கு தடை விதித்துள்ளதும் எனவே பக்தர்கள் உணவருந்திய எச்சில் இலையில் அங்கப்பிரதட்சணம் செய்யலாம் என்ற தனி நீதிபதியின் உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. இது தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால், அது போன்ற நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கக்கூடாது. இவ்வாறு நீதிபதிகள் உத்தரவில் கூறியுள்ளனர்.

# இ.பி.எஸ். உடன் ஒரே மேடையில் விவாதிக்க தயார்: அமைச்சர் ரகுபதி

**சென்னை, மார்ச் 14-**
இ.பி.எஸ். அழைத்தால் நானே ஒரே மேடையில் விவாதிக்க தயார் என்று அமைச்சர் ரகுபதி தெரிவித்தார்..
தமிழக உரிமைகளை தி.மு.க. அடகு வைத்ததாக கூறிய அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் குற்றச்சாட்டிற்கு அமைச்சர் ரகுபதி பதில் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: கஞ்சா தமிழகத்தில் பயிரிடப்படுவதில்லை. வடமாநிலங்கள், வெளிநாடுகளில் பயிரிடப்படுகிறது. கஞ்சா தமிழகத்திற்குள் வருவதை மத்திய அரசு தடுக்க தவறிவிட்டு தமிழக அரசின் மீது குற்றம்சாட்டுவது ஏற்கத்தகாதது. அ.தி.மு.க. வை நான்கரை ஆண்டுகள் பா.ஜ.க.விடம் அடகுவைத்துவிட்டு ஆட்சி நடத்தினார் எடப்பாடி பழனிசாமி.
தி.மு.க. அரசு எந்த வகையிலும் டெல்லிக்கு அடங்கியும் போகாது. அடமானமும் வைக்காது. எங்களுக்கு சொந்த புத்தி உண்டு. சொந்த காலில் நிற்கும் சக்தி உண்டு. சொந்த மண்ணை காப்பாற்றும் திறமையும் உண்டு. நாங்கள் விவாதத்திற்கு தயார் என எத்தனையோ முறை சொல்லி விட்டோம். இ.பி.எஸ். அழைத்தால் நானே ஒரே மேடையில் விவாதிக்க தயார்.
இவ்வாறு அவர் கூறினார்.

# த.வெ.க.வில் விஜய்யின் உதவியாளர் மகனுக்கு மாவட்டச் செயலாளர் பதவி

**சென்னை, மார்ச் 14-**
தென்சென்னை மேற்கு மாவட்ட செயலாளராக விஜய்யின் உதவியாளர் ராஜேந்திரனின் மகன் சபரிநாதன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
தமிழக சட்டசபைக்கு அடுத்த ஆண்டு மே மாதம் தேர்தல் நடக்க இருக்கிறது. இந்த தேர்தலை எதிர்கொள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் தயாராகி வருகிறது. தமிழக அரசியலில் புதிய வரவான நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக்கழகமும் தேர்தலை சந்திக்க தீவிரம் காட்டி வருகிறது. இதற்கான முன்னெடுப்புகளை தமிழக வெற்றிக் கழகம் மேற்கொண்டுள்ளது. தற்போது கட்சியின் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டு, அதற்கான பணிகளை விஜய் முழு வீச்சில் செய்து வருகிறார்.
இதன்படி விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தில் படிப்படியாகக் கட்சி நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். இதுவரை 95 மாவட்டங்களுக்கு மாவட்டச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த சூழலில் நேற்று 6-வது கட்டமாக மாவட்டச் செயலாளர்கள் பட்டியலை தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் வெளியிட்டார். பனையூர் கட்சி அலுவலகத்தில் விஜய் நேரடியாக ஆலோசனை நடத்தியநிலையில், 19 மாவட்டங்களுக்கான மாவட்ட செயலாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டது.
இந்நிலையில் தென் சென்னை மேற்கு மாவட்ட செயலாளராக விஜய்யின் உதவியாளர் ராஜேந்திரனின் மகன் சபரிநாதன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ராஜேந்திரன் விஜய்யின் ஓட்டுநராக இருந்து உதவியாளராக உயர்ந்தவர். இவர் விஜய் உடன் 40 ஆண்டுகளாக தொடர்ந்து உடனிருந்து வருகிறார். ராஜேந்திரனின் மகன் சபரிநாதன் 21 வயதிலேயே விஜய் மக்கள் இயக்கத்தில் இணைந்தவர். அதன்பின் 6 ஆண்டுகளாக தொடர்ந்து மக்கள் இயக்கப் பணிகளை மேற்கொண்டு வந்திருக்கிறார். இதன் காரணமாகவே சபரிநாதனுக்கு மாவட்டச் செயலாளர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது

## தனியார் பால், தயிர் விலை உயர்வு:
# விலை உயர்வை உடனே திரும்பப்பெற பால் முகவர்கள் சங்கம் வலியுறுத்தல்

**சென்னை, மார்ச் 14-**
விலை உயர்வை திரும்பப் பெற பால் முகவர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.
தமிழ்நாடு பால் முகவர்கள் தொழிலாளர்கள் நலச்சங்க மாநில தலைவர் பொன்னுசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் தனியார் பால் நிறுவனங்களின் பால் மற்றும் தயிரின் விற்பனை விலை உயர்வு அமலுக்கு வந்து ஒரு மாதமே ஆகும் நிலையில் தென்னிந்தியாவின் முன்னணி தனியார் பால் நிறுவனம் நேற்று (13-ந் தேதி) இரவு முதல் பாலுக்கான விற்பனை விலையை லிட்டருக்கு 4 ரூபாயும், தயிருக்கான விற்பனை விலையை கிலோவுக்கு 3 ரூபாய் வரையிலும் உயர்த்துவதாக பால் முகவர்களுக்கு சுற்றறிக்கை வழங்கியுள்ளது.
இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் வணிக பயன்பாட்டிற்கு அதிகளவில் பயன்படுத்தப்படும் நிறைகொழுப்பு பாலின் விற்பனை விலை லிட்டர் 80 ரூபாய் என்கிற இமாலய இலக்கை தொட்டிருக்கிறது.
ஒரு மாத இடைவெளியில் இரண்டாவது முறையாக பால் மற்றும் தயிர் விற்பனை விலையை உயர்த்தும் தனியார் நிறுவனத்தின் தன்னிச்சையான விற்பனை விலை உயர்வு அறிவிப்பிற்கு தமிழ்நாடு பால் முகவர்கள் தொழிலாளர்கள் நலச் சங்கம் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்வதோடு இந்த விற்பனை விலை உயர்வு அறிவிப்பை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்துகிறது.
இவ்வாறு அவர் கூறிஉள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# சாத்தூர் பகுதிகளில் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து அமைச்சர் ஆய்வு



**விருதுநகர், மார்ச் 14-**

சாத்தூர் பகுதியில் வளர்ச்சித்திட்ட பணிகளை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் ஆய்வு நடத்தினார்.

விருதுநகர் மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் தலைமையில், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ரகுராமன் முன்னிலையில், அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், சாத்தூர், அருப்புக்கோட்டை மற்றும் வெம்பக்கோட்டை ஆகிய வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அதன்படி, பொதுப்பணித்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், நெடுஞ்சாலைத்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம், கிராம குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் திட்டம், பாதாள சாக்கடை திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், நீர்வளத் துறை, சுகாதாரத்துறை, பள்ளிக் கல்வித்துறை, மதிய உணவு திட்டம், வேளாண்மைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, 15 வது பொது நிதி குழு மானியத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள், மாநில நகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம், மாநில நிதி கழகம், கலைஞரின் கனவு இல்லம், ஊரக வீடுகள் சீரமைப்பு திட்டம், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் உள்ள தமிழர்களுக்கான நலத்திட்டங்கள், பிரதம மந்திரி குடியிருப்பு வீடுகள் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பொது நூலகத்துறை, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, நமக்கு நாமே திட்டம், நபார்டு நிதி,

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தூய்மை பாரத இயக்கம், அனைத்து வீடுகளுக்கான குடிநீர் இணைப்பு வழங்கும் உயிர் நீர் இயக்கம், நெடுஞ்சாலை சாலை மற்றும் சிறு பாலங்கள், முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டம், பொது நிதி, கனிமவள நிதி உட்பட பல்வேறு திட்டங்கள் மற்றும் நிதிகளின் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ள பணிகள் மற்றும் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள், இலக்கு நிர்ணயம் செய்யப்பட்ட பணிகள், முடிவுற்ற பணிகள், நிலுவையில் உள்ள பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு, நிலுவையில் உள்ள பணிகள் மற்றும் நடைபெற்று வரும் பணிகளை தரமாக விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என தொடர்புடைய அரசு அலுவலர்களை அறிவுறுத்தினார்.

மேலும், பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணிகள், நிலுவையிலுள்ள பணிகள், முடிவுற்ற பணிகள், நடைபெற்று வரும் பணிகளை விரைந்தும், தரமானதாகவும் உரிய காலத்திற்குள் செய்து முடித்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என தொடர்புடைய அரசு அலுவலர்களை அறிவுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் அனைத்துத் துறை அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



**தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்ற தலைப்பினில் தமிழகத்தை வஞ்சிக்கும் மத்திய அரசைக் கண்டித்து மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருப்பரங்குன்றம் தெற்குயில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் பங்கேற்று கண்டன உரையாற்றினார். உடன் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.**

# மேலூரில் கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா



**மேலூர், மார்ச் 14-**

மேலூரில் கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மேலூர் வட்டராம் சார்பில் சமுதாய வளைகாப்பு விழா மேலூர் நகராட்சி சந்தைபேட்டை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடை பெற்றது.

மேலூர் நகர்மன்ற தலைவர் முகமது யாசின், நகராட்சி ஆணையாளர் பாரத், அ.வல்லாளபட்டி பேரூராட்சி சேர்மன் குமரன் ஆகியோர் தலைமை தாங்கினார். மதுரை மாவட்ட திட்ட அலுவலர் ஷீலா சுந்தரி சிறப்புரை ஆற்றினார்.

மேலூர் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் ரதி தேவி நன்றியுரை ஆற்றினார். 100 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

கர்ப்பிணி பெண்கள் அனைவருக்கும் வளைகாப்பு விருந்து உபசரிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மேலூர் நகர் மன்ற துணைத் தலைவர் இளஞ்செழியன், நகராட்சி பொறியாளர் முத்துகுமார், மேலாளர் மாதவன், மேலூர் உணவு பாதுகாப்பு அலுவலர் பால்சாமி, மேலூர் நகர்புற அரசு ஆரம்ப சுகாதர நிலைய மருத்துவ அலுவலர் ஜாய்ஸ் யாணி,

நகர் மன்ற உறுப்பினர்கள், குழந்தை வளர்ச்சி திட்ட மேற்பார்வையாளர் ராணி, அங்கன்வாடி பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சுதந்திர போராட்ட வீரர்கள் குறைதீர்க்கும் கூட்டம்: கலெக்டர் ஜெயசீலன் தகவல்

**விருதுநகர், மார்ச் 14-**

விருதுநகர் மாவட்டத்தில் சுதந்திர போராட்ட வீரர்கள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் வருகிற 19- ந்.தேதி மாலை 4.30 மணி அளவில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் விருதுநகர் மாவட்ட மத்திய மாநில சுதந்திர போராட்ட தியாகிகளின் வாரிசுகள் அனைவரும் கலந்து கொண்டு ஓய்வூதிய பலன்கள் குறித்து தங்கள் குறைகளையும், ஆலோசனைகளையும் நேரில் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

## திருமங்கலம் பகுதியில்

# பலத்த மழையால் பயிர்கள் சேதம்: விவசாயிகள் கவலை

**திருமங்கலம், மார்ச் 14-**

திருமங்கலம் பகுதியில் பெய்த பலத்த மழையின் காரணமாக அறுவடை செய்து வைக்கப்பட்டுள்ள மானாவாரி பயிர்கள் நனைந்து சேதமாவதாலும்,அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாலும் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். வழக்கத்திற்கு மாறாக நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாக மதுரை உள்ளிட்ட தென்மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளில் கடந்த இரு நாட்களாக பலத்த மழை பெய்தது.இந்நிலையில் திருமங்கலம்,கள்ளிக்குடி மற்றும் பேரையூர் தாலுகாக்களின் சில பகுதிகளில் துவரை உள்ளிட்ட மானாவாரி பயிர்கள் அறுவடை தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது.இதனிடையே அறுவடை முடிந்து பயிர்களை சாலைகளிலே உலரவைத்து, உதிரவைத்து அதனை சேமித்து வைத்திடும் பணிகள் கிராமப்பகுதிகளிலும் வேகமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் கடந்த இருநாட்களாக திருமங்கலம், கள்ளிக்குடி மற்றும் பேரையூர் தாலுகாக்களில் மாசி மாதத்தில் வழக்கத்திற்கு மாறான வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக 3செ.மீ வரையில் பலத்த மழைபெய்தது.இதனால் வயல்களில் விளைந்துள்ள துவரை உள்ளிட்ட மானாவாரி பயிர்களை அறுவடை செய்திடும் பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.அதேபோல் அறுவடை செய்து சாலைகளில் கொட்டி உலரவைக்கப்பட்டுள்ள பயிர்களும் மழையில் நனைந்து சேதமடைந்து வருகின்றன.இதனால் அறுவடை செய்த பயிர்களும்,அறுவடைக்கு தயாராக உள்ள பயிர்களும் முளைத்திடும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர்.இருப்பினும் மழையிலிருந்த தப்பித்திடும் யுக்தியாக பயிர்களை மிகப்பெரிய பிளக்ஸ் பேனர்களை கொண்டு மூடி அவற்றினை காப்பாற்றிட விவசாயிகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

# மணக்காட்டூரில் மின்சாரம் தாக்கி பள்ளி சிறுவன் உயிரிழப்பு

**நத்தம், மார்ச் 14-**

மணக்காட்டூரில் மின்சாரம் தாக்கியதில் பள்ளி சிறுவன் உயிரிழந்து உள்ளான்.

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே மணக்காட்டூரை சேர்ந்தவர் ராஜேஸ் (48). இவரது மகன் புகழேந்தி(13). மணக்காட்டூர் அரசு பள்ளியில் 8-ம் வகுப்பு படித்து வந்தான். இந்நிலையில் நேற்று தனது நண்பர்களுடன் முன்தினம் புகழேந்தி கிரிக்கெட் விளையாடிய போது பந்து புதருக்குள் போய் விழுந்தது. உடனே விழுந்த பந்தை எடுக்க முயன்ற போது டவருக்கு செல்லும் மின் மோட்டாரில் இருந்து வந்த மின்சாரம் அவரை தாக்கியது. இதில் தூக்கிவீசப்பட்ட புகழேந்தி சம்பவ இடத்திலேயே பலியானார். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற நத்தம் போலீசார் இறந்தவரின் பிரேதத்தை கைபற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் இச்சம்பவம் குறித்து நத்தம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பரமக்குடியில் நடந்த வாலிபர் கொலை வழக்கில் ஒருவர் நீதிபதி முன்பு சரண்

**பரமக்குடி, மார்ச் 14-**

முதுகுளத்தூர் தாலுகா, விக்கிரபாண்டியபுரம் வலசை கிராமத்தை சேர்ந்தவர் இருளாண்டி. இவரது மகன் உத்திரகுமார் (35).கடந்த 5-ம் தேதி இரவு பரமக்குடி தீயணைப்பு நிலையம் அருகே உள்ள அவரது சகோதரி வீட்டிற்கு சென்று திரும்பி வந்தபோது மூன்று இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் தலையில் ஹெல்மெட் அணிந்து கையில் வாளுடன் வந்து உத்திரகுமாரை சரமாரியாக தலையில் வெட்டினர்.

இதில் உத்திரகுமார் நிலைகுலைந்து சம்பவ இடத்திலேயே தலை சிதைந்து ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இச்சம்பவம் குறித்து போலீசார் தனிப்படை அமைத்து தேடி வந்த நிலையில் பரமக்குடி வைகை நகரை சேர்ந்த ராமசாமி மகன் கரன் என்ற பேபி கரன் (23), பரமக்குடி மஞ்சள் பட்டினம் ராஜேந்திரன் மகன் தயா என்ற தீன தயாளன் (23), பரமக்குடி பங்களா ரோடு அமீர் அப்துல் ரகுமான் மகன் கலாம் (23) ஆகிய மூவரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர். மேலும் இவ்வழக்கில் பரமக்குடி வைகை நகர் பகுதியை சேர்ந்த இராமசந்திரன் மகன் நிதிஷ் (26) பரமக்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் மன்றம் முன்பாக சரண் அடைந்தார். போலீசார் நிதிஷை சிறையில் அடைத்தனர்.

## திருமங்கலத்தில் நள்ளிரவில்

# வி.ஏ.ஓ. தலையில் அம்மிகல்லை போட்டு கொலை செய்ய முயற்சி

**திருமங்கலம், மார்ச் 14-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் இடப்பிரச்சனை காரணமாக வி.ஏ.ஓ.வின் தலையில் அம்மிக் கல்லை போட்டு கொலை செய்ய முயன்ற சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருமங்கலம் நகர் பானுதியேட்டர் அருகே முனியாண்டி என்பவரது மகனான முத்துப்பாண்டி(45) என்பவர் வசித்து வருகிறார். உரப்பனூர் கிராம நிர்வாக அலுவலராக உள்ள இவருக்கு ஆசைபொண்ணு என்ற மனைவியும் ஒரு மகன் மற்றும் மகள் உள்ளனர்.

திருமங்கலம் முகமதுஷாபுரம் பகுதியை சேர்ந்தவர் ராஜா முகமது(45). இவரது மனைவி ஜம்ருத்பீவி(42). இவர்களுக்கு ரபிக் முகமது(19), மற்றும் 16 வயது மகன் உள்ளனர். ராஜாமுகமது மனைவியுடன் ஏற்பட்ட கருத்துவேறுபட்டால் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு குடும்பத்தினை பிரிந்து தனியாக வசித்து வருகிறார். இந்நிலையில் வி.ஏ.ஒ முத்துப்பாண்டிக்கும்

ஜம்ருத்பீவிக்கும் இடையே இடப்பிரச்சனை இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இதனால் ஆத்திரமடைத்த ஜம்ருத் பீவி தனது மகன்களுடன் சென்று வி.ஏ.ஓ முத்துப்பாண்டி குடியிருக்கும் வீட்டிற்கு வந்து கதவை தட்டி தகராறு செய்துள்ளனர்.அவர் கதவை திறக்காததால் வீட்டின் பின்பக்கம் சென்று கதவை உடைத்த ஜம்ருத் பீவியின் மகன்கள் அங்கு கிடந்த அம்மிகல்லை எடுத்து வி.ஏ.ஓ முத்துப்பாண்டியின் தலையில் போட்டுள்ளனர். இதில் பலத்த காயமடைந்த அவர் மயங்கி கீழேவிழுந்தார்.

இதை கண்ட அவரது மனைவி ஆசைபொண்ணு அதிர்ச்சியடைந்து சத்தம் போடவே அக்கம்பக்கத்தினர் திரண்டு வந்து 3 பேரையும் பிடித்தனர். இது பற்றி தகவல் அறிந்த திருமங்கலம் நகர் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து படுகாயமடைந்த வி.ஏ.ஓ முத்துப்பாண்டியை 108 ஆம்புலன்ஸ் மூலமாக மீட்டு மதுரை அரசுமருத்துவமனைக்கு அனுப்பிவைத்துவிட்டு இச்சம்பவம் தொடர்பாக திருமங்கலம் நகர் போலீசார் விசாரணை நடத்தினர்.

அம்மிகல்லால் வி.ஏ.ஓ.வை தாக்கி கொலை செய்ய முயற்சித்ததாக அவரது மனைவி ஆசை பொண்ணு கொடுத்த புகாரின் பேரில் ஜம்ருத் பீவி மற்றும் அவரது இரு மகன்களை திருமங்கலம் டவுன் போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதனிடையே வி.ஏ.ஓ முத்துப்பாண்டி உயிருக்கு ஆபத்தான நிலையில் மதுரை அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த சம்பவம் திருமங்கலம் நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## மேலூரில்

# மத்திய அரசை கண்டித்து அமைச்சர் மூர்த்தி தலைமையில் ஆர்ப்பாட்டம்



**மேலூர், மார்ச் 14-**

மேலூரில் மத்திய அரசை கண்டித்து அமைச்சர் மூர்த்தி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மேலூர் நகரில் தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டன பொதுக்கூட்டம் மேலூர் பஸ் நிலையம் முன்பு நடைபெற்றது. மேலூர் தி.மு.க. நகர் மன்ற தலைவரும், நகர் செயலாளருமான முகமது யாசின் தலைமை தாங்கினார்.

மேலூர், கொட்டாம்பட்டி ஒன்றிய செயலாளர்கள் பால கிருஷ்ணன், ராஜராஜன், ராஜேந்திரபிரபு, பழனி, கார்த்திகேயன், கிருஷ்ணமூர்த்தி, குமரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மதுரை வடக்கு மாவட்ட செயலா ளரும், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி கலந்து கொண்டு பேசினார்.

தலைமை கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். மதுரை வடக்கு மாவட்ட நிர்வாகிகள் சேகர், தனசெல்வம், ஜி.பி.ராஜா, தொகுதி பொறுப்பாளர்கள் கிருஷ்ணகுமார், செல்வகுமார், மதுரை வடக்கு மாவட்ட ஒன்றிய கழகச் செயலாளர்கள் தனராஜ், பரந்தாமன், தனசேகர், ஜெயராமன், மருதுபாண்டியன், சசிக்குமார், அன்பழகன், காவேரி, சுதன், தவமணி, மதிவெங்கடேஷ், ராசாமணி, பொதுக் குழு உறுப்பினர்கள் செல்வராஜ், சுவைதா பேகம் அப்பாஸ், மதுரை வடக்கு மாவட்ட அணி அமைப்பாளர்கள் வேலாயுதம், கலைவாணன், அல்போன்ஸ், தற்காகுடி சரவணன், கலாநிதி, கலைக்கார்த்திகேயன், ரேணுகா ஈஸ்வரி, குமரேசன், மற்றும் கட்சி முன்னோடிகள் ரெகுபதி, துரை புகழேந்தி, கொன்னடியான், துரை. மகேந்திரன், சந்தானம், சேதுராமன், கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர். மேலூர் நகர் மன்ற துணைத் தலைவர் இளஞ்செழியன் நன்றி கூறினார்.

## ஒட்டன்சத்திரத்தில்

# நகர் மன்ற கவுன்சிலர் கூட்டம் அமைச்சர் தலைமையில் நடந்தது



**ஒட்டன்சத்திரம், மார்ச். 14-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சியில் நகர்மன்ற கவுன்சிலர் கூட்டம் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நகராட்சி வளர்ச்சி பணிகள் குறித்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் நகர்மன்ற தலைவர் திருமலைசாமி, நகன்ற துணைத் தலைவர் வெள்ளைச்சாமி, ஆணையாளர் ஸ்வேதா,பொறியாளர் சுப்ரமணிய பிரபு, கணக்காளர் சரவணன், சுகாதார ஆய்வாளர் ராஜமோகன், வருவாய் ஆய்வாளர் விஜய்பால் ராஜ்,

உதவியாளர் அருள் முருகன் உள்ளிட்ட நகர்மன்ற உறுப்பினர்கள், நகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கீழவளவு முனியாண்டி சுவாமி கோயில் மகா கும்பாபிஷேக விழா



**மேலூர், மார்ச் 14-**

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கீழவளவு கிராமத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ முனியாண்டி சுவாமி ஸ்ரீ சின்னக் கருப்பு ஸ்ரீ தொட்டிச்சி அம்மன் மற்றும் ஸ்ரீ சாராயக்காளை சுவாமி திருக்கோவிலின் மஹா கும்பாபிஷேக விழா நேற்று 13 ந் தேதி காலை சிறப்பாக நடைபெற்றது. பக்தர்கள் தொடர்ந்து 15 நாட்கள் கடுமையான விரதமிருந்து வந்தனர்.

12-ந் தேதி மாலை கணபதி ஹோமம், வாஸ்து சாந்தி பூஜையுடன், மாலையில் மங்கள இசையுடன் கெங்கா பூஜை, சாந்தி பூஜை, தனபூஜை, விக்னேஸ்வரா பூஜை, தொடங்கியது.

13-ந் தேதி இன்று காலையில் இரண்டாம் கால யாகசாலை பூஜை ஹோம குண்ட பூஜை, 7 வகையான வகையான ஹோமங்கள், பூர்ணாகுதி தீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து கோவில் முன்பு அமைக்கப்பட்டுள்ள யாகசாலையில் இருந்து புனித நீரினை சிவாச்சாரியார் தலைமையில் காப்பு கட்டிய பக்தர்கள் கோவிலை ஊர்வலமாக சுற்றி வந்தனர்.அதனைத் தொடர்ந்து மேலூர் இ.மலம்பட்டியை சேர்ந்த பிரம்ம ஸ்ரீ சிவ ஆகம சிரோண்மணி வி.என்.எஸ். கார்த்திகேயன் சிவாச்சாரியார் தலைமையில் சிவாச்சாரியார்கள் வேத மந்திரம் முழங்க அப்போது வானத்தில் கருட பகவான் வட்டமிட்டு பக்தர்களுக்கு காட்சியளித்தார். புனித நீரினை கும்பத்தில் ஊற்றி மஹா கும்பாபிஷேக வெகு விமர்சையாக நடைபெற்றது. தொடர்ந்து சுவாமிகளுக்கு விசேஷ தீபாரணை நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கீழவளவு மற்றும் சுற்றுப்புற கிராமங்களிலிருந்து ஏராளமான பக்த கோடிகள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து சிறப்பு செய்தனர். அதனைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட சிறப்பு அன்னதானம் நடைபெற்றது. நிகழ்ச்சி ஏற்பாட்டினை கீழவளவைச் சேர்ந்த கோணங்கூட்டம் வகையறா செய்திருந்தனர்.

# நத்தத்தில் நின்று கொண்டிருந்த லாரியில் டீசல் திருட்டு

**நத்தம், மார்ச் 14-**

நத்தத்தில் நின்று கொண்டிருந்த லாரியில் டீசல் திருடப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. தருமபுரி மாவட்டம் அரூரை சேர்ந்தவர் தர்மர்(52). இவர் திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் உள்ள தேங்காய் குடோன்களில் தேங்காய்களை வெளி மாநிலங்களுக்கு ஏற்றிச் செல்வார். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு வழக்கம்போல் தேங்காய்களை ஏற்றி கொண்டு அம்மன்குளம் பகுதியில் லாரியை நிறுத்தி வைத்து விட்டு தூங்கி விட்டார். பின்னர் நேற்று காலை எழுந்து பார்த்த போது டீசல் டேங்க் மூடி உடைக்கபட்டு அதிலிருந்த 250 லிட்டர் திருடு போயிருந்தது தெரியவந்தது. இது குறித்து நத்தம் போலீசில் தர்மர் புகார் அளித்துள்ளார். அதன் பேரில் நத்தம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



முதல்வரும், மாநில திட்டக்குழு தலைவருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக்குழுவின் ஆறாவது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துணை முதல்வரும், மாநில திட்டக்குழுவின் அலுவர் சார் துணைத்தலைவருமான உதயநிதி ஸ்டாலின், செயல் துணைத்தலைவர் ஜெயரஞ்சன், தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் துறை சார்ந்த அரசு உயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முகாம் அலுவலகத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் 'காலநிலை வீரர்கள்' திட்டத்தின் மூலம் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 50 ஆட்டோக்கள் வழங்கி, கொடியசைத்து வழியனுப்பினார். இந்நிகழ்வின் போது நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### மகளிர் சுய உதவிக்குழுக்களை சேர்ந்த 50 பேருக்கு

# மின்சார ஆட்டோக்களை வழங்கினார் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்

**சென்னை, மார்ச் 14-**

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 50 மின் ஆட்டோக்களை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் "காலநிலை வீரர்கள்" திட்டத்தின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 50 மின் ஆட்டோக்கள் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான பசுமை உட்கட்டமைப்புகளை முழுமையாக செயல்படுத்திய பள்ளிகளுக்கு பசுமைப் பள்ளிகளுக்கான சான்றிதழ்களை தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;- தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முகாம் அலுவலகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 50 மின் ஆட்டோக்களை வழங்கி, கொடியசைத்து வழியனுப்பி வைத்தார். இந்த மின் ஆட்டோக்களில் மகளிர் சுய உதவிக் குழுவினர் இயற்கை சிற்றுண்டிகளை விற்பனை செய்திடவும், மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும், விற்பனை செய்வதற்கும் இந்த வாகனங்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

மேலும், தமிழ்நாடு புதுமைத் தொழில் முனைவோர் திட்டத்தின் இணைய முகப்பை தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து கடலோர தமிழகத்திற்கான உயிர்க்கேடய வரைபடங்கள், பாரம்பரிய மீள்திறனுக்கான வேர்கள் - பழங்குடியினரும் காலநிலை மாற்றமும், நிலையான வாழ்விடத்திற்கான சிறந்த நடைமுறைகள் ஆகிய தலைப்பிலான 3 புத்தகங்களையும் வெளியிட்டார்.

இந்நிகழ்வின் போது, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹூ, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் ஆ.ர .ராகுல்நாத், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஸ்ரேயா பி சிங், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் முனைவர் எம்.ஜெயந்தி, தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் உதவித்திட்ட இயக்குநர் விவேக்குமார், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய உறுப்பினர் செயலர் ஆர்.கண்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



புதுடெல்லியில் உள்ள தெலுங்கானா மாநில முதலமைச்சரின் இல்லத்தில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, கனிமொழி எம்.பி. ஆகியோர் நேற்று தெலுங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டியை சந்தித்து தமிழ்நாடு முதலமைச்சரின் கடிதத்தை ஒப்படைத்து, வருகின்ற மார்ச் 22-ம் தேதி சென்னையில் நடைபெறவுள்ள 'பாராளுமன்ற தொகுதி மறுவரையறை' தொடர்பாக அமைக்கப்பட்ட கூட்டு நடவடிக்கை குழுக் கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுத்தனர். இந்நிகழ்வின் தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, கலாநிதி வீராசாமி, என்.ஆர்.இளங்கோ, அருண்நேரு ஆகியோர் உடனிருந்தனர்.

# தொகுதி மறுசீரமைப்பு கூட்டத்தில் பங்கேற்க ரேவந்த் ரெட்டி முடிவு

**புதுடில்லி, மார்ச் 14-**

தொகுதி மறுசீரமைப்பு ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்கவுள்ளதாக தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி தெரிவித்துள்ளார்.

தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக வரும் 22ஆம் தேதி சென்னையில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டிக்கு அமைச்சர் கே.என்.நேரு, தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவர் கனிமொழி உள்ளிட்டோர் அழைப்பு விடுத்தனர்.

இதன்பின்பு டெல்லியில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய ரேவந்த் ரெட்டி, "தொகுதி மறுசீரமைப்பு ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்பேன், இது தொடர்பாக எனது கட்சி தலைமையிடம் ஆலோசித்து முடிவெடுப்பேன்" என்று தெரிவித்தார்.

மேலும் பேசிய அவர், "தமிழக முதல்வர் ஸ்டாலின் தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக நடைபெறும் சென்னையில் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க எனக்கு அழைப்பு விடுத்தார். மத்திய அரசின் நடவடிக்கையை நாங்கள் ஒருநாளும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். நாங்கள் வடஇந்தியாவை விட அதிக வரி கொடுக்கிறோம். நாங்கள் அதிக தொழில்முனைவோர்களை உருவாக்கியுள்ளோம்.

பா.ஜ.க. வளர தென்னிந்தியா அனுமதிக்காததால் தென்னிந்தியாவை பா.ஜ.க. அரசு பழிவாங்குகிறது. கேரளா, தமிழ்நாடு, தெலங்கானா ஏன் கர்நாடகா கூட பா.ஜ.க.வை தோற்கடித்துள்ளனர். அவர்களுக்கு ஆந்திராவில் கூட இல்லை. இதற்கு பெயர் தான் பழிவாங்கும் அரசியல். முதல்வர் மு.க.ஸ்டாலின் எடுத்துள்ள இந்த நடவடிக்கையை பாராட்டுகிறேன்" என்று தெரிவித்தார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்க கர்நாடக முதல்வர் சித்தராமையா, ஆந்திர முன்னாள் முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி, ஒடிசா முன்னாள் முதல்வர் நவீன் பட்நாயக் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், மொண்டெனேகுரோ நாட்டின், பெட்ரோவாக்கில் நடைபெற்ற FIDE உலக ஜூனியர் சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரணவ் வெங்கடேஷை பாராட்டி உயரிய ஊக்கத்தொகையாக 20 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்வின் போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் பிரணவ் வெங்கடேஷ் பெற்றோர் உடனிருந்தனர்.

### செஸ் வீரர் பிரணவ் வெங்கடேஷ்-க்கு

# 20 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகை: முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை, மார்ச் 14-**

நாட்டில் 20 வயதுக்குட்டோருக்கான உலக ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற செஸ் வீரர் பிரணவ் வெங்கடேஷ்-க்கு உயரிய ஊக்கத்தொகையாக ரூ.20 லட்சத்திற்கான காசோலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். உடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், மற்றும் பிரணவ் வெங்கடேஷ் பெற்றோர்.

விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் உலக அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்குகொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், சென்னை தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், மான்டினீக்ரோ நாட்டின், பெட்ரோவாக்கில் நடைபெற்ற நாட்டில் 20 வயதுக் குட்டோருக்கான உலக ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்று வரலாறு படைத்த தமிழக செஸ் வீரர் பிரணவ் வெங்கடேஷை பாராட்டி உயரிய ஊக்கத்தொகையாக ரூ.20 லட்சத்துக்கான காசோலையை வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்தினார்.

பிரணவ் வெங்கடேஷ், 2022-ஆம் ஆண்டில் கிராண்ட் மாஸ்டர் பட்டத்திற்கு தகுதி பெற்றார். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நடத்திய சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் போட்டியில் சேலஞ்சர்ஸ் பிரிவில் வெற்றி பெற்ற பிரணவ் வெங்கடேஷ்-க்கு பரிசு தொகையாக ரூ. 6 லட்சம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டம்

**சென்னை, மார்ச் 14-**

சென்னையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று (மார்ச் 14) தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நடைபெறும் என்று, அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழக முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க. ஸ்டாலின் தலைமையில், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் இன்று (மார்ச் 14) வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெறும். அதுப்போது தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும், என்று அவர் கூறியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் இன்று (மார்ச் 14) தமிழக அரசின் பட்ஜெட் தாக்கல் செய்யப்படவுள்ளது. தொடர்ந்து வேளாண் பட்ஜெட்டும், மானியக் கோரிக்கை மீதான விவாதங்களும் நடைபெறவுள்ளது. பட்ஜெட் கூட்டத் தொடர், தமிழக அரசின் நலத் திட்டங்களின் நிலை குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

# 1 முதல் 9-ம் வகுப்பு மாணவர்களுக்கான இறுதித்தேர்வு அட்டவணை வெளியீடு

**சென்னை, மார்ச் 14-**

தமிழகத்தில் 1 முதல் 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான ஆண்டு இறுதித் தேர்வு அட்டவணையை பள்ளிக் கல்வித் துறை வெளியிட்டுள்ளது.

தற்போது 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத் தேர்வு தொடங்கி நடைபெற்று வருகிறது. 10-ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத்தேர்வு வரும் மார்ச் 28-ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 15 ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

இந்த நிலையில், 1 முதல் 5 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு முழு ஆண்டு தேர்வு ஏப். 9 ஆம் தேதி முதல் ஏப். 21 ஆம் தேதி வரை நடைபெறும் என்று தெரி விக் கப் பட் டுள் ளது. அதேபோல், 6 முதல் 9 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ஏப். 8 ஆம் தேதி முதல் ஏப். 24 ஆம் தேதி வரை ஆண்டு இறுதித் தேர்வு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 1 முதல் 5 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ஏப். 21 ஆம் தேதியில் இருந்தும் 6 முதல் 9 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ஏப். 25 ஆம் தேதியில் இருந்தும் கோடை விடுமுறை தொடங்குகிறது.

# தமிழ்நாடு பட்ஜெட்...

(1-ம் பக்க தொடர்ச்சி)

கோரிக்கைகள் மீது எம்.எல்.ஏ.க்களின் விவாதம் நடத்தப்படும்.

**துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு....**

அலுவல் ஆய்வுக்குழு முடிவு செய்யும் தேதிகளில் அந்தந்த துறைக்கான விவாதம் நடத்தப்பட்டு, அன்றே அந்தந்த துறைகளின் அமைச்சர்கள் பதில் அளிப்பார்கள். பின்னர் துறைகளுக்கு ஒதுக்க வேண்டிய நிதி ஒதுக்கீடு குறித்து எம்.எல்.ஏ.க்களின் குரல் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, அந்தத் துறைக்கு நிதி ஒதுக்கப்படும். இந்த பட்ஜெட் கூட்டத்தொடர் ஒரு மாதத்திற்கும் மேலாக நீடிக்கும் என்று கூறப்படுகிறது. 2025-2026-ம் ஆண்டுக்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மற்றும் 2024-2025-ம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி) ஆகியவை வரும் 21-ம் தேதியன்று அவைக்கு அளிக்கப்படும்.

# தமிழகத்தில் நாளை முதல் மீண்டும் வெப்பத்தின் தாக்கம் அதிகரிக்கும்

**சென்னை, மார்ச் 14-**

கோடை வெயில் வாட்டி வதைத்து வந்த நிலையில், வெயிலுக்கு இதமாக தமிழ்நாட்டின் அனேக இடங்களில் சில நாட்களாக மழை பெய்து வருகிறது.

தமிழக கடலோரப் பகுதிகளையொட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் நிலவிய வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இந்த மழை பொழிந்தது. இதனால் கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் பரவலாக வெப்பத்தின் தாக்கம் குறைந்துள்ளது. தமிழ்நாட்டின் பெரும்பாலான இடங்களில் 5 முதல் 8 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் குறைவாக பதிவானது.

இந்நிலையில், தமிழகத்தில் இன்று வெப்பத்தின் தாக்கம் இயல்பை விட குறைவாகவே இருக்கும் என தெரிவித்துள்ள வானிலை மையம், நாளை முதல் வெப்பத்தின் தாக்கம் மீண்டும் அதிகரிக்கும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.



கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நேற்று முதல்வர் மருந்தகம் தொடர்பான அனைத்து மாவட்ட இணைப்பதிவாளர்களுடன் காணொளி காட்சி வாயிலாக ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மை செயலாளர் சத்யபிரத சாகு, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் நந்தகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.